தென்மொழி

இந்திக் கோட்டையைச் சுக்குநூ றாக்குக!

இந்தி என்னும் இரும்புக் கோட்டையை
    இடித்துச் சுக்குநூ றாக்குக! அங்கே
செந்தமிழ்க் கோட்டையைச் செழிப்புடன் எழுப்புக!
    சிறுமைச் சாதி மதங்களை அகற்றுக!
சொந்தமென் றொருநிலம் தமிழருக் காக்குக!
    சோர்வையும் அடிமைத் தனத்தையும் விலக்குக!
இந்தவோர் கொள்கையில் தமிழினம் இணைத்தால்
    எந்தமிழ் இருக்கும்; இனமிருக் காதே!

வடி : 19

லை : 1

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

விலை

நமக்கு வந்த மடல்கள்.

0 : 944 : பாவலரேறு ஐயா, வணக்கம்.

தாங்கள், திராவிடர் கழக இயக்க மாநாடுகளில் கலந்து கொள்வது சரியன்று என்று ஓர் அன்பரின் மடல் தென்மொழியில் கண்டேன். நம் கொள்கைகளுக்கும் அவர்களுடைய கொள்கை களுக்கும் என்ன பெரிய வேறுபாடுகள் உள்ளன ? தமிழ்மொழி வளர்ச்சியில் நம்மளவிற்கு அவர்களுக்குப் பெரிதும் முயற்சிகள் இல்லையென்று வேண்டுமானால் சொல்லலாம்; எனினும் அடிப்படை யில் அவ்வுணர்வு அவர்களுக்கு இல்லையென்று சொல்லிவிட முடியாது. தமிழின, நாட்டு விடுதலை உணர்வில் அவர்கள் நம் அமைப்புக்கு எந்த வகையிலும் தாழ்ந்தவர்கள் அல்லர்.

மேலும் அவ்வன்பர், திராவிடர் கழகம் சாதியின் பெயரால் நயன்மை வேண்டுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். அதில் என்ன தவறு இருக்க முடியும்? சாதியின் பெயரால்தானே, இப் பெரும்பான்மைத் தமிழ்க் குமுகாயத்தை ஆரியப் பார்ப்பனர்கள் கல்வி, மற்ற தலையாய உரிமைகளை மறுத்துத் தாழ்த்தி வந்திருக் கிறார்கள். முள்ளை முள்ளால் எடுப்பதுபோல், தந்தை பெரியார், சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்டவர்களுக்குச் சலுகைகள் கிடைக்க வழி செய்தார்கள். நூற்றுக்கு எழுபது விழுக்காடு கல்வியறிவற்ற மக்களைக் கொண்டுள்ள நாட்டில், சான்றிதழ்களில் சாதியைக் குறிப்பிடாமல் விட்டால் மட்டும் சாதி ஒழிந்து விடுமா ? ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இக் குமுகாயத்தில் வேரோடியிருக்கும் சாதி முறையை ஒரு குறுகிய காலத்திற்குள் ஒழித்துக்கட்ட வழியே இல்லை. தமிழர்கள், சாதியின் பெயரால்; சலுகைகள் பெற்றுத் தங்களுக்கு நிகராக உயருகிறார்களே என்னும் எரிச்சலில்தான் பார்ப் பனர்கள், சாதி அடிப்படையில் சலுகைகள் வழங்குவதைப் பெரிதும் எதிர்க்கின்றார்கள் என்பதை அவ்வன்பர் உணர வேண்டுகின்றேன். கோயிலில் மணியடிக்கும் உரிமை கிடைத்துவிட்டால் மட்டும் சாதிகள் ஒழிந்துவிடா. என்றாலும், ஆயிரக்கணக்கான ஆண்டு களாக நம் தலைமீது சுமத்தப்பட்ட சூத்திரப் பட்டம் ஒழியுமன்றோ?

எனவே, சிறிய கருத்து வேறுபாடுகளைப் பெரிதுபடுத்திக் கொண்டு நாம் பிளவுபட்டிருந்தது போதும். உலகத் தமிழின முன்னேற்றத்திற்கென்று அமைப்பு கண்டுள்ள தாங்கள் தாம் தமிழின மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும்.

— கோ. மணிவேலன் குறிஞ்சிப்பாடி.

0 : 945 : பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பைந்தமிழ் காக்கும் பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம் பல !

தாங்கள் பல்வகைப் பணிச்சுமைகட்கும் இன்னல்கட்கும் இடர்ப் பட்டும், தவறாது எங்கள் இல்லத்திருமணத்திற்கு வருகை தந்ததும், வந்தோர் வியக்க அரிய பெரும் அறிவுச் சொற்பொழிவு நிகழ்த்தி

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner



தூக்கில் இடவேண்டாம்!

தூக்கில் இடவேண்டாம்! — இளங்
குட்டி மணியையும் — செகனையும் — சிங்களர்
தூக்கில் இடவேண்டாம்!

தேக்கிய வீரத்தின் தொகுப்பன்றோ, அன்னவர்!
தமிழீழ நலத்துக்குத் தம்நலம் தின்னவர்!
பாக்கொளும் துணிவொடு சாவையும் கொன்றவர்!
பாருக்குள் விடுதலை வரலாற்றின் குன்றவர்! (தூக்)

சிங்கள நாட்டுக்கும் பெருமை,அவர் பிறப்பு!
செந்தமிழ் இனத்துக்கே இழப்பு,அவர் இறப்பு!
எங்குமே உலகினில் வீரமிலா மற்போகும்;
இவர்களைத் தூக்கிட்டால், வீரத்தின் உயிர்சாகும்! (தூக்)

கொலைசெய்ய வில்லையா, மறவர்கள் போரினில்?
குடிநலம் காத்திடக் களைகொய்தார் வேரினில்!
விலையதற் கீவது தமிழீழம் ஒன்றுதான்!
வீணர்கள் இருந்தென்ன? மறம் வாழ்தல் நன்றுதான்! (தூக்)

வீரங்கள் கொழிக்கின்ற விளைநிலத் தோப்பு,அவர்
வேண்டுதல் வேண்டாத தன்மைக்குக் காப்பு,அவர்!
ஈரங்கொள் மனத்தினுல் எண்ணியே பாருங்கள்!
இளைஞரை அழிக்காமல் வாழ்க்கையைத் தாருங்கள்! (தூக்)

Scanned with CamScanner

திரு.வி.க. எனுந் தெய்வம்!

மணவழ கர்க்கு நூற்றாண் டு,விழா!
மணக்க மணக்க நடந்தது நாட்டில்!
உணவும் உடையுமே
வாழ்க்கையென் றுலவும்
உலுத்தர்க் கிடையிலும்
ஊசையர்க் கிடையிலும்
பணமே நோக்கம், பகட்டே ஆக்கமெனும்
பன்னாடை மக்கட் கிடையிலும் வாழ்ந்த
குணமே வியஒரு கொள்கையின் குன்றம்;
குற்றமில் லாதஓர்
வாழ்க்கையின் கூறு, அவர்!

"பொய்யைச் சொல்லித்தான் வாழ்க்கை பண்ணலாம்,
புரட்டைச் செய்துதான் புகழைத் தேடலாம்;
மெய்யைச் சொன்னால் மெச்சுவ தார்"—எனும
மேனா மினுக்கிகள் வாழ்ந்திடும் நாட்டினில்,
கையைக் கறைசெயா துடல்நலம் கருதாது
காலம் முழுதுமே கடமைகள் ஆற்றிட
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தநல் தெய்வம்!
வாழ்த்தினால் நாமும் வாழ்கின்ற மொய்ப்பு!

தூய்தமிழ் வழக்கைத் தோற்றிய பெருமை
துறவி மறைமலைக் குண்டெனில், இவர்க்கு
வாய்தமிழ் உரையை மேடைமேல் ஏற்றி
வையம் முழக்கிய பெருமைமிக் குண்டாம்!
ஓய்வும் ஒழிவும இலாமல் 'என்றனின்
உடலம் மண்ணுக்கு; உயிர்தமி ழுக்'கென
ஏய்வுறு கூற்றை எழுதிச் செய்தவர்!
என்றென்றும் வாழும் எந்தமிழ் போன்றவர்!

'பணியுமாம் பெருமை' எனும்பைந் தமிழ்க்குப்
பயில்வுரை எழுதிப் பதிப்புரை தந்தவர்!
தணியாத் தமிழ்விடாய், தளர்வுறாக் கால்கள்,
தாழ்விலாச் செய்கை, தகைவுசேர் பயனுரை,
அணியம் தமிழ்க்கெனும் அருமை நூல்கள்
அயர்வுறு தேழையர்க் கலைந்து திரிந்து
மணியும் நேரமும் காலமும் பாராது
மக்கட் குழைத்த மணவழக னாரே!

தமிழ்மொழி உள்ள வரையிலும் வாழ்வீர்!
தமிழினம் வாழ்கின்ற வரையிலும் வாழ்வீர்!
இமிழ்கடல் உலகில் இயங்குதொழி லாளர்
ஏற்றம் எங்குண்டோ அங்கெலாம் வாழ்வீர்!
கமழ்தரும் தூய்தமிழ்க் கருத்திலே வாழ்வீர்!
கடமை, ஒழுக்கம், உண்மையில் வாழ்வீர்!
அமிழ்வுறு நேர்மையில் ஆண்மையில் வாழ்வீர்!
அன்னைக் குலத்தினர் அருளில்வாழ் வீரே!

Scanned with CamScanner

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன் (சிங்கை), தென்மொழிமறை. நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக்குமரனார் தென்மொழி ப. துரையரசன், தென்மொழி. நா. இளமாறன்.

அமைச்சர் : அழ. இளமுருகன், அறி. இ.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 19] தி. பி. ௨0௧௩ மடங்கல் (ஆகச்-செப்'82) [ஓலை 1

இந்தி என்னும் இடர்தரும் கொடும் பேய்!

மீண்டும் இந்தி பேயாட்டம் போடுகிறது. **ஆகாச வாணி**'யில் நுழைந்து ஆரவாரப் படுத்திய அது, இக்கால் '**தூரதரிசனி**'லும் தூள் கிளப்புகிறது. கடந்த ஐம்பது ஆண்டுக் காலப்போராட்டம் இது; இன்னும் ஓயவில்லை.

நம் தலைவர்களும் இரண்டில் ஒன்று பார்த்து விடுவோம் என்று முனைவதாகக் காணோம். அவ்வப்பொழுது அது வருவதும், நாம் அதை அடித்து விரட்டுவதும், பெரும் போராட்டமாக, வாழ்க்கையின் பெரும் பகுதி இதிலேயே கழிந்து போகிறது. நம் தலைவர்கள்

இதை உண்மையாக எதிர்க்கின்றார்களா? தெரியவில்லை. இப்படி இந்தி வந்து அடிக்கடி அச்சுறுத்திக் கொண்டிருந்தால்தான், அவர்களும் ஆளுக்கொரு வகையில் அதை எதிர்த்து அறிக்கைவிட, மாநாடு கூட்ட, தீர்மானம் போட வாய்ப்பிருக்கும் என்று எண்ணுகிறார்களோ என்னவோ? இங்குள்ள தமிழ், ஆங்கிலச் செய்தித் தாள்களும், பிற கிழமை, மாத இதழ்களும் அவ்வப்பொழுதுதான் இந்தி எதிர்ப்பு ஆரவாரங்களை ஒன்றுதிரட்டி ஓலங்களை எழுப்புகின்றன. மற்ற நேரங்களில் அவற்றிற்குத் திரைப்பட நடிகை, நடிகரின் அலங்கோலங்கள்தாமே அவற்றின் அட்டைப் படங்கள், உரைகளாக இருக்கின்றன! மொத்தத்தில் இந்தியை ஒரேயடியாக ஒழித்துக் கட்டுவதில் இங்குள்ளவர்களுக்கு முனைப்பு வரக்காணோமே' ஒருவேளை, இந்த மெலிவை இந்திக்காரர்கள் நன்கு விளங்கிக் கொண்டார்களோ?

செய்தி விளம்பரத்துறை **சேத்தி** சொல்கிறார் அல்லது கேட்கிறார், 'இந்தியை எதிர்க்கின்ற இங்குள்ள முதலமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் தங்கள் பெயர்களில் வடமொழியை வைத்துக்கொண்டு இந்தியை எதிர்ப்பது ஏன்?' என்பதாக ஒரு கேள்வி! அக்கேள்வியைச் சரியென்றே வைத்துக் கொள்வோம். அவர்கள் இருவருந்தாமா, தமிழ்நாடு? அவர்கள் ஒப்புக் கொண்டால் அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டுமா, என்ன?

தில்லிக்காரர்கள் உணர வேண்டும், ஒருமைப்பாடு என்பதை இந்தி மொழியையும் ஆரிய நாகரிக மேலாளுமையையும் பரப்புவதன் வழிதான் உண்டாக்க முடியும் என்றால், அந்த ஒருமைப்பாடு அழிந்து போகட்டும்; சுக்கு நூறாகட்டும்! அப்படிப்பட்ட ஒருமைப் பாட்டை நாம் ஏன் அடிமைகளைப் போல் இன்னும் ஏற்றுக்கொள்ள வேண்டும்?

நடுவணரசோ, பிற வடவரோ தமிழ் நாட்டை இந்தியைக் கொண்டு சீரழிக்கும் முயற்சிகள் இனியும் பலிக்கா அந்நிலைகள் தொடருமானால் '**ஆகாசவாணி**'கள் தகர்க்கப்படும்; '**தூரதரிசன்**'கள் தூள்தூளாக்கப்படும்! இந்தியை ஏற்றுக் கொண்டால்தான் அவை இங்கு இயங்கும் என்றால், அவை தேவையே இல்லை; அவற்றை ஆள்பவர்களையும் நாம் ஏற்றுக் கொள்ள வில்லை; அந்த இறுதி நிலைக்கு எங்களை ஆளாக்க வேண்டாம், வடவர்கள்!

இதற்கிடையில் நம்மவர்கள் ஒன்றை உணர வேண்டும். உண்மையான இந்தியெதிர்ப்பை நாம் இதுவரை காட்டியிருக்கிறோமா? இன்னொன்றையும் நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இப்பொழுதுள்ள சட்டப்படி, அல்லது திட்டப்படி நாம் இந்தியை எதிர்த்துத் தடுத்து நிறுத்திவிட முடியுமா? முடியாது; முடியவே முடியாது. எனவே இந்தியை எதிர்ப்பதில் இனியும் நாம் காலத்தை வீணடித்துக் கொண்டு கிடப்பதில் பொருளில்லை; நயன்மையில்லை.

நேருவின் உறுதிமொழியே இந்திப் போராட்டத்திற்கு இறுதிமொழி ஆகாது: நேருமொழி ஒருவகைச் சூழ்ச்சி மொழியே! அதால் நாம் முழுப்பயனையும் பெற்றுவிட முடியாது. அதன் முடிவே நமக்கு இறுதி வெற்றியைத் தேடித் தந்துவிட முடியாது.

நேருவின் உறுதிமொழியை நம்பி இந்திப் போராட்டம் தள்ளிப் போடப்படுவதே, இந்தி எதிர்ப்பின் வெற்றி என்று இங்குள்ள பலர் எண்ணிக் கொண்டுள்ளனர். இன்றுள்ள தலைமுறையினரின் தமிழுணர்வும் அல்லது இந்தியெதிர்ப்புணர்வும் மழுங்கடிக்கப்படுகிற பொழுது, ஒரு காலகட்டத்தில், இந்தி, திடுமெனச் சூறாவளி போல் வந்து நம்மை ஒட்டுமொத்தமாகத் தாக்கவே செய்யும். எனவே இதற்கொரு மாற்று வழி கண்டே—கடைப்பிடித்தே—ஆகவேண்டும்.

இந்தித் தவிர்ப்பு அல்லது தனித் தமிழ்நாடு கோரிக்கை என்று போர்க்குரல் எழுப்ப வேண்டும். அதனால் வரும் அதிகார வல்லாட்சிக் கொடுமைகளை நாம் ஏற்றுக் கொள்ளவே வேண்டும். மெல்ல மெல்ல வடவரின் கையோக்கம் மேலோங்கியே நிற்பதற்கு இதைவிட வேறு தீர்வில்லை. இங்குள்ள இந்திய அடிமைகளும், வடவரின் கையாள்களும், தேசியத் திருடர்களும் நம்மைக் காட்டிக் கொடுக்கவே செய்வர். அவர்கள் காட்டிக் கொடுக்கிறார்கள் என்பதற்காக நாம் வடநாட்டு வெறியர்களிடம் வாலாட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை; குழைந்து நெளிந்து குனிந்து கொண்டிருக்க வேண்டியதில்லை; அவர்களின் வேண்டாத ஒட்டுறவை நாம் வெட்டியெறிய முன்வர வேண்டும். ம.கோ. இராமச்சந்திரன்களும் கருணாநிதிகளும் இதைச் செய்ய முன் வருவார்களா ? இல்லை, பல்லிளித்துக் கொண்டு, அவர்களுக்குப் பாதபூசை செய்வதிலேயே தங்கள் காலத்தைக் கடத்தி விடுவார்களா ? இந்த இரண்டில் ஒன்று நமக்குத் தெரிய வேண்டும்! அல்லது நாம் இதைச் செய்வதற்காவது அவர்கள் இருவரும் வழிவிட வேண்டும் !

இன்னொன்று, இவ்விடைக்காலத்தில், இந்தியோ ஆரிய ஆளுமையோ முற்றாக இத் தமிழ்ப் புலத்தில் கால்வைப்பதைத் தடுக்க வேண்டுமானால், தமிழ்மொழியை இங்கு ஆழமாக வேரூன்றச் செய்ய வேண்டும். ஆனால், இங்குள்ள தமிழர்களுக்குத் தமிழ்மொழி வளர்ச்சியிலோ, தமிழிலோ உண்மையான கவலையிருப்பதாகத் தெரியவில்லை. கவலையிருப்பதாக மட்டும் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள்! அவற்றால் மக்கள் தாம் ஏமாற்றப்படுகிறார்கள்! ஆங்கிலத்தில் இவர்களுக்குள்ள ஆராக் காதல் தமிழ் மேலும் வரவேண்டும்; ஒருபடி மேலேயே எம்ப வேண்டும். ஆனால், இங்குள்ள தலைவர்கள் தங்கள் பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் ஆங்கிலமும் இந்தியும் தாமே படிக்க வைக்க அனுப்புகிறார்கள். இவர்களே இப்படியிருக்கையில் அப் பிள்ளைகள் தலைமுறையில் நிலைமை எப்படியிருக்குமோ, சொல்ல முடியாதே !

(தொடர்ச்சி பின் பக்கம்)

செய்திச் சுருக்கம்.

விடுதலைப் புலிகளின் விடுதலை

தமிழகத்தில் பிடிபட்ட விடுதலைப் புலிகளாகிய முகுந்தன் என்றழைக்கப் பெறும் **உமா மகேசுவரன்**, கரிகாலன் என்று அழைக்கப் பெறும் **பிரபாகரன்**, இராகவன் என்றழைக்கப் பெறும் **சிவக்குமார்**, கண்ணன் என்றழைககப் பெறும் **சோதீசுவரன்**, நிரஞ்சன் என்று அழைக்கப் பெறும் **சிவனேசுவரன்** ஆகிய ஐவரும் கடந்த 6-8-82 வெள்ளி மாலை 6 மணியளவில், கட்டுப் பாட்டுப் பிணையலில் (Conditional Bail) சென்னை நடுவண் சிறையிலிருந்து விடுதலை செய்யப் பெற்றனர்,

ஒவ்வொருவரும் 3000 உருபா பொறுப்புத் தொகையும், அதே தொகைப் பொறுப்பு ஏற்கும் இருவர் பிணையலும் தந்து சென்னை, உயர் நெறி மன்ற நடுவர் எசு. பத்மனாபன் அவர்களால் விடுவிக்கப் பெற்றார்கள்.

அவர்கள் ஐவரும் இடை விடுவிப்புக் காலத்தில் முறையே சென்னை, மதுரை, புதுக்கோட்டை, திருச்சி, வேலூர் ஆகிய ஊர்களில் தங்கியிருத்தல் வேண்டும் என்பதும், அத்துடன் அவர்கள் அனைவரும் ஒவ்வொரு நாள் மாலையிலும் 6 மணிக்கு அந்தந்த மாவட்ட நடுவண் குற்றப் புலனாய்வுத் துறையிடம் வருகை தந்து கையெழுத்திடல் வேண்டும் என்பதும் வழக்கு மன்றக் கட்டுப்பாடுகள்.

6-8-82 அன்று மாலை, சிறையிலிருந்து விடுவிக்கப் பெற்ற அவர்களை எதிர் கொண்டு சிறை வாயிலில் பெரிய கூட்டமாக, ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் — பல்வேறு வண்டிகளிலும் வந்து காத்திருந்தனர். ஆனால் அவர்கள் அத்தனைப் பேர்களும் பல்வேறு காவல் துறையைச் சேர்ந்த ஒற்றர்களே! இந்த இக்கட்டான சூழலில் அவர்களை வரவேற்பதற்குச் சென்றவர்கள் எழுவரே! அவர்கள் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**, தாமரை பெருஞ்சித்திரனார், புலவர் இறைக்குருவனார், மணவைத்தம்பி, பூங்குன்றன், ஆற்றலரசு, பொழிலன் ஆகியோர். தி. மு. க. வழக்கறிஞர் டி. பி. இராதாக் கிருட்டிணன் முகுந்தனுக்காக வழக்கு மன்றத்திலிருந்து விடுவிப்புக் கட்டளை பெற்று வந்திருந்தார்.

பாவலரேறும் குடும்பத்தினரும் புலிகளை வரவேற்க வந்துள்ளனர் என்று தெரிந்ததும் காவல்துறை அதிகாரிகள் பாவலரேறு அவர்களைச் சூழ்ந்து கொண்டு பலவாறு கேள்விகளைக் கேட்டனர். அவற்றுக்கெல்லாம் முறையாக விடைகள் அளிக்கப் பெற்றன. —>

(முன்பக்கத் தொடர்ச்சி)

தமிழா, நீ எப்பொழுதுதான் விழித்துக் கொள்ளப் போகிறாயோ தெரியவில்லையே! விழிப்பாயோ அல்லது தூக்கத்திலேயே அழிந்து போவாயோ! அதுவும் தெரியவில்லையே! ஒன்றால் விழி. அல்லது அழி!

— பெருஞ்சித்திரனார்

Scanned with CamScanner

புலிகள் வெளியே வந்ததும், பாவலரேறு அவர்கள் ஐவருக்கும் கைத்தறித் துண்டுகளைப் போர்த்தி, வாழ்த்துக் கூறி வரவேற்றார். புலிகள் அப் பெருமையை விரும்பாமல் தயக்கம் காட்டிய பொழுது பாவலரேறு, 'காவலர்களும் வேறு சிலரும் உங்களைக் கொடுமையானவர்கள், கொள்ளைக் காரர்கள் என்றெல்லாம் நினைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்கும், நீங்கள்தாம் பெருமைக்குரிய உண்மையான விடுதலை வீரர்கள் என்று அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்கும் அடையாளமாகத்தான் உங்களை வாழ்த்தி வரவேற்க வந்துள்ளோம்' என்று அவர்களிடம் கூறிப் பெருமைப் படுத்தினார்.

விடுதலைப் புலிகள் தமிழகத்தில் கட்டுப் பாட்டில் இருந்து கொண்டுள்ளனர். அவர்கள் மேலுள்ள கட்டுப் பாடுகளைத் தளர்த்த முயற்சி எடுக்கப் பெற்று வருகிறது. அவர்கள் மேல் உள்ள வழக்கு இன்னும் நடைபெறவில்லை.

அன்பர்களுக்கோர் நல்வாய்ப்பு

அனைவரும் தவறாமல் பங்கு பெறுக

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் திருக்குறள் தொடர் சொற்பொழிவு

சென்ற ஆண்டு சேலம் மாவட்டம், கோனேரிப்பட்டியில் நடைபெறுவதாயிருந்து, இடையில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் மனு எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றமையால் நின்று போன **திருக்குறள் தொடர் சொற்பொழிவு** அடுத்து வரும் **திசம்பர் 24-ஆம் பக்கல் தொடங்கி, 1983 சனவரி 2-ஆம் பக்கல் வரை,** 10 நாட்கள், பெரியார் மாவட்டம் **பவானி**யில் 'பாவேந்தர் இலக்கியப் பேரவை' சார்பாக நடைபெற இருக்கிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். விரிவான அறிக்கை பின்னர் வெளியிடப் பெறும்.

முன்கூட்டியே விளக்கம் வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும்

காவேரி மின்நகர்.	அமைப்பாளர்
குதிரைக்கல் மேடு (அஞ்)	**தென்மொழி நா. இளமாறன்**
பவானி (வழி), 638302	இளம் பொறியாளர்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் திருச்சி மாவட்டக்கிளைத் தொடக்க விழா

உ. த. மு. க. வின் திருச்சி மாவட்டக் கிளையின் தொடக்க விழா வரும் 26-9-82-இல் திருச்சி நகரில் மிகச் சிறப்பாக நடைபெற விருக்கிறது.

விழாவில் கழக முதல்வர் **பாவலரேறு** அவர்களும் அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள், எனத் திருச்சி மாவட்ட உ. த. மு. க. செயலாளர் **நாரா. மகிழ்நன்** தெரிவிக்கிறார்.

நாங்கள் என்ன சொல்கிறோம்!

1) தமிழ்நாட்டில் பிறந்த சிறந்த தலைவர்களின் விழாக்களை வட இந்தியாவிலும் கொண்டாட நடுவண் அரசு ஆவன செய்ய வேண்டும். அப்போதுதான் தேசிய ஒருமைப்பாட்டிற்கு உண்மையான பொருள் கிடைக்கும்.

திரு.வி.க. நூற்றாண்டு விழாவில் அமைச்சர் வீரப்பன்.

வடவர்கள் நம்மைப் போல் அத்துணை **ஏமாளிகள்** அல்லர்! தேசிய ஒருமைப்பாடு என்பதே வடவர்களுடன் நாம் ஒத்துப் போக வேண்டுமென்பதுதானே! இதைவிட வேறு பொருளை எவராவது சொல்ல முடியுமா? எனவே இஃதொரு வெற்றுப் பேச்சு!

2) மேனகா ஆதரவுப் பாராளுமன்ற உறுப்பினரைக் கொல்ல முயற்சி. அடி உதை; சட்டை கிழிந்தது!

—**செய்தி.**

இந்திராவுக்கு எதிராக எதுவும் நடக்கக் கூடாது என்பதுதானே, இந்திய அரசியல் கொள்கை! அது மேனகாவாக இருந்தால் என்ன? அரம்பையாக இருந்ததால் என்ன?

3) கருணாநிதியின் ஆதரவு கிடைக்காமல் போனாலும், எம். சி. இராவின் ஆதரவை இந்திரா பேராயம் கேட்டுப் பெறுவதுதான் அறிவுடைமையாகும். பெரியகுளத்தில் பேராயம் வெற்றி பெறுவதற்கு அவரை விட்டால் வக்கில்லை.

—சுதேசமித்திரன் ஆசிரியர் பிலிப் தாமசு.

அடிமைகளின் அறிவுரை வேறு எப்படி இருக்க முடியும்? தாமசு வேண்டுமானால் அதைக் கொஞ்சம் **'ஏசு'**த் தனமாகக் கூறலாம்!

4) தமிழ் இளைஞர்களுக்குத் தூக்குத் தண்டனை தரக்கூடாது. 'இலங்கைக்' குடியரசுத் தலைவர், அவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும்.

—தமிழக முதல்வர் **ம.கோ. இரா.** வேண்டுகோள் மடல்.

முதலமைச்சர் முதலில் இங்கு ஆண்டுக் கணக்காய் அடைத்து வைத்திருக்கும் **தீவிரப் பொதுவுடைமையாளர்க்கு**(நக்சலைட்டுகளுக்கு) **இரக்கம்** காட்டட்டும்!

5) ஓய்வுபெற்ற மாநிலக் காவல் துறை அதிகாரி தளவாய் சுந்தரத்திற்கு, செயலலிதாவின் பாதுகாப்பதிகாரியாகப் பதவி தரப்பட்டது.

— அரசுச் செய்தி

ஓர் **இளைய 'அதிகாரியை'** வைக்காமல் **'ஓய்வுபெற்ற'** அதிகாரி ஒருவரை வைப்பதில் உள்ள **பாதுகாப்பு** முதலமைச்சருக்குத்தான் தெரியும்!

Scanned with CamScanner

6) கோவையில் தொடங்க இருக்கும் பாரதியார் பல்கலைக் கழகத் தொடக்க விழாவில் கலந்து கொள்ளத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி ஆர்வம்!
- கல்வியமைச்சர் அரங்கநாயகம் செய்தி.

அவாளின் 'வல்லாண்மை'க்கு அடித்தளங்கள் அமைவதில் ஆர்வம் இராதா, பின்னே!

7) விண்வெளி ஆய்வில் பெண்கள் பெரும் பங்கு ஆற்ற முடியும் என்பது மெய்ப்பிக்கப்பட்டு விட்டது. — வான்வெளி சென்று திரும்பிய உருசிய வீராங்கனை **சுவெத்லானா சாவிட்சுகயா.**

விண்வெளிக்கு மேலுள்ள 'கடவுள் உலக' ஆய்விலும் வாழ்விலும் தான் இந்நாட்டுப் பெண்களால் பெரும் பங்கு ஆற்ற முடிகிறது! என்ன செய்வது?

8) திருச்சி, திருவானைக்காவல் கோயிலுக்குள் ஆதிசங்கரர் சிலையை வைத்துவிடப் பெருமுயற்சி! கி. ஆ. பெ. தலைமையில் அமைந்த போராட்டக்குழு எதிர்ப்பு--செய்தி

திருச்சியில் மட்டுந்தானா இந்த முயற்சி..? நாளைக்கு மதுரையில் நடைபெறாது என்று சொல்ல முடியுமா? தனித்தனியாகவா இதைத் தடுக்க முடியும்? ஒட்டுமொத்தமாக ஒரு போராட்டத்திற்கு முயலாத வரையில், இதைத் தடுக்கவே முடியாது என்பதைப் போராட்டக்குழு உணர வேண்டும்.

9) சிற்றூர்ப் புறங்களில் தட்டுப்பாடின்றிக் குடிநீர்! 170 கோடி உருபாயில் மிகப் பெரிய திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்து உள்ளது. —செய்தி

அறிவித்துத் தானே உள்ளது! அடுத்த தேர்தலுக்கு வேலை தொடங்கும் என்று எதிர்பார்க்கலாம்!

10) மீண்டும் நாட்டில் நெருக்கடி நிலை கொண்டு வர, குடியரசுத் தலைவர் செயில் சிங்கிடம், மதுரை மாவட்ட இளைஞர் பேராயம் வேண்டுகோள் அறிக்கை!
— செய்தி

பின்னே, மதுரையில் இருப்பவர்களெல்லாரும் '**பாண்டியர்க**'ளாகி விடமுடியுமா?

11) உத்திரப் பிரதேசத்தில், சீமா செயின் என்னும் பதினாறு அகவை உள்ள திருமணம் ஆகாத பெண்ணை,ஒரு காவல் துறை அதி-

'பாரத மாதா' பாரத மாதா' என்று சொல்லும் தேசியத் திருடர்களுக்கு இதைவிட,வேறு அவமானம் இருக்க முடியாது.

காரி தூக்கி வரச்செய்து அவரும், அவர் கூட்டாளியான ஒரு முரடனும், மற்றும் திக்காமர், மகாரபுரி, பாந்தி, பஞரசு, கார்தி ஆகிய காவல் நிலையங்களில் உள்ள அத்தனைக் காவலரும், பல நாட்கள் தொடர்ந்து கற்பழித்தனர். சீமா மூச்சு மட்டுமே விடுகிற சடலமாக இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிறாள். — செய்தி.

சீமாவுக்கு மட்டும் இல்லை. பாராத மாதாவுக்கும் ... அந்த அம்மாள்...நேரே வரும் வாய்ப்பிருந்தால்-இந்நிலை ஏற்படாது என்று சொல்ல முடியாது. — என்ன செய்வது; மன்னன் எப்படி, குடிகள் அப்படி!

12) சிறையிலிருந்து வெளிவந்த சில நாட்களிலேயே மீண்டும் கழுத்துத் தொடரி (சங்கலி)யைத் திருடிக் காவலர்களிடம் பிடிபட்டார். —செய்தி.

வேறென்ன செய்வது? காவலர்களுக்குத் தரவேண்டிய 'கப்பம்' எச்சம் இருந்திருக்கும்!

13) மக்களில் பகைவர்கள், நண்பர்கள் என்று இருவகை உண்டு. நண்பர்களாகவும் இல்லாமல், பகைவர்களாகவும் காட்சியளிக்காமல் இருப்பவர்களை **நொதுமலர்** எனக் குறிப்பிட்டு ஒரு புதிய தமிழ்ச் சொல்லைத் தமிழில் உருவாக்கியவர் திரு வி. க.

— **நெடுஞ்செழியன்**, கலைவாணர் அரங்கில் நடந்த திரு வி க விழாப் பேச்சு — 'முத்துச்சரம்' 29-8-82.

கூட்டத்திற்கேற்ப எதையாவது வாய்க்கு வந்ததைச் சொல்வது இன்றைய நாகரிகம் என்பதற்கு இக் கூற்றே சான்று. நொதுமலர் பழைய இலக்கியச் சொல், நற். 11; குறுந். 171, 294; கலி. 59; அகம். 300; களவியல் 29. - **காண்க!**

14) தமிழகம் இப்பொழுது அஞ்சத் தகுந்த ஒரு கொடுமையைச் சந்திக்க இருக்கிறது. சிறிது சிறிதாக இந்தி நுழைகிறது. 'ஆகாசவாணி' தூரதர்சினி' என்றெல்லாம் வந்து முதாதையர் காத்து வந்த தமிழ்மொழி அழியும் நிலை உருவாகி வருகிறது. இதைத் தமிழக **இளைஞர்கள்** சிந்திக்க வேண்டும். அவர்கள் **கட்சி வேறுபாடு பாராமல்** இதை எதிர்க்க முன்வர வேண்டும் இல்லையேல் மிகப்பெரிய கேடு சூழ்ந்து விடும்.

— அமைச்சர் **காளிமுத்து** பேச்சு. சிங்கா நல்லூர் கூட்டத்தில்!

கட்சிக்குள்ளே இருந்திதைச் சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி? ஒருவேளை காளிமுத்துவுக்குத் தாம் இளைஞராக இல்லாதது நினைவுக்கு வந்திருக்குமோ? என்னவோ?

உ. த. மு. க. செய்திகள்

மூன்றுமாத இடைவெளிக்குப் பின், **உலகத் தமிழின முன்னேற்றக் கழக** முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள், கழக அமைப்புகளில் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய தென்மாவட்டங்களின் மாவட்ட, வட்டப் பொறுப்பாளர்களை அமர்த்துதல் தொடர்பாகக் கடந்த 23-7-82 வெள்ளி பகல் 2 மணியளவில் வைகைத் தொடர்வண்டியில் புறப்பட்டுச் சென்றார். அவருடன் தென்மொழி **செ. கண்ணன்** அவர்களும் சென்றார். இருவரையும் திருச்சித் தொடர்வண்டிச் சந்திப்பில், திருச்சி மாவட்ட, உ.த.மு.க. செயலாளர் தென்மொழி **நாரா. மகிழ்நன்** அவர்களும், தென்மொழி சு. **இளங்கோவன்** அவர்களும் சந்தித்து உரையாடி, திண்டுக்கல்லுக்கு வழியனுப்பினர்.

முதல்வரும் உதவியாளர் கண்ணனும் திண்டுக்கல் தொடர்வண்டி நிலையத்திற்கு இரவு 9-மணியளவில் வந்து இறங்கினர். அங்கு முன்கூட்டியே தலைமைக்கழக அமைப்புச் செயலாளர் தென்மொழி **ப. துரையரசன்** வந்திருந்தார். அவருடன், முதல்வரை வரவேற்கத் திருவாளர்கள் இரா. கழராம்பன், இளவேனில் கழராம்பன், மு. பழனிச்சாமி, கா. முருகேசன், வெ. இராசு, சா. சான் போசுக்கோ, பி. இலட்சுமணன், வே. இராசேந்திரன், க.வே. பாலசுப்பிரமணியன், மருத்துவர். விசயரங்கக் கண்ணன், கயிலை. வீ. இராசாராம், மா. தினகரன், செல்வன் தி. செழியன், செல்வி தி. கலைமதி ஆகியோர் தொடர்வண்டி நிலையத்திற்கு வந்திருந்தனர்.

முதல்வர் திண்டுக்கல்லில் தங்குவதற்கு நீண்ட நாளைய தென்மொழியன்பர் திரு. இரா. கழராம்பனும் பிறரும் ஏற்பாடு செய்திருந்த நகராட்சிப் பயணியர் விடுதிக்கு அனைவரும் சென்றனர். அறை முயற்சியைப் பிறர் கவனித்துக் கொண்டிருக்கையில், பாவலரேறு அவர்கள் வரவேற்பறையில் அன்பர்கள் சிலருடன் பேசிக் கொண்டிருந்தார். அது பொழுது, திருப்பூர் தென்மொழியன்பர் திரு. மாசிலாமணியின் தமையனார் திரு. மா. தினகரனும் அவரின் குழந்தைகள் தி. கலைமதி (ஆறும் வகுப்பு), தி. செழியன் (எட்டாம் வகுப்பு) இருவரும் பாவலரேறுவிடம் மிக அன்பாகவும் மகிழ்வாகவும் உரையாடிக் கொண்டிருந்தனர். குழந்தைகள் இருவரும் அக்கால தென்மொழி, தமிழ்ச்சிட்டில் வெளிவந்த பல பாடல்களை இனிமையாகவும், பொருளுணர்வுடனும் பாடினர். அவற்றைக் கேட்டு மகிழ்ந்து பாவலரேறு அவர்கள் குழந்தைகளை மிகவும் பாராட்டினார்.

அதன்பின்னர், தங்கும் அறை அணியமாகாமல் போகவே, அருகில் உள்ள 'பாவா விடுதியில் முதல்வரை அன்பர்கள் அன்றைய இரவு மட்டும் தங்க வைத்தனர். நள்ளிரவில் மின்பாறையிலிருந்து கோவை மாவட்ட உ. த. மு. க. செயலாளர் **இளஞ்சேரல் முதுபாண்டியன்**

அறைக்கு வந்து சேர்ந்தார். மறுநாள் காலை 6 மணியளவில், பழனி, 'தமிழ்ச்சுடர்' ஆசிரியர் சோ. முத்துமாணிக்கம் அறி.இ, க.மு., திருச்சி மாவட்ட உ. த. மு. க. பொருளர் குழந்தை ஈகவரசன், ஆகியோர் முதல்வர் பாவலரேறு அவர்களை வந்து பார்த்துப் பேசிக் கொண்டிருந்தனர். 10 மணியளவில் அறைவழிப்போக்கர் (பயணியர்) விடுதிக்கு மாற்றப் பெற்று, 11 மணியளவில் அமைப்பு நிகழ்ச்சி தொடங்கியது.

திண்டுக்கல் : (மதுரை மாவட்டத் தெற்கு)

நிகழ்ச்சிக்கு அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் அன்பர்கள் பேரளவில் வந்திருந்தனர். நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன், திண்டுக்கல் தமிழ்ச் சங்கச் செயலாளர் புலவர். துரை முருகு. க.மு, ஆ.ப. அவர்களும் தமிழாசிரியர் கழகப் புரவலர் திருக்குறள் அ.அ.வெ. அண்ணாமலை அவர்களும் வந்து, பாவலரேறு அவர்களிடம் திண்டுக்கல் தமிழ்ச்சங்கச் சார்பில் ஒரு நிகழ்ச்சி அமைக்க நாள் கேட்டுக்கொண்டு சென்றனர். அதன்பின்னர் நிகழ்ச்சி தொடங்கியது. நெடுநாளைய தென்மொழி அன்பர்கள் கல்லை. பெருஞ்சித்திரன், போழறப்பட்டி ப. அறவாழி, கா. பூண்டி மறவன், பாலு தென்னவன், ஒட்டவை தமிழ்வேந்தன் முதலியோர் நிகழ்ச்சியில் மகிழ்வுடன் வந்து பங்கேற்றனர். அமைப்பு நிகழ்ச்சி மாலை 6 மணிவரை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அமைப்பாளர்களின் உணவுப் பொறுப்பையும், தங்கல் செலவையும் நம் அன்புக்குரிய திரு. இரா. கழராம்பன் அவர்களும், இரவு உணவுச் செலவைத் திரு. பா. வி. இரா. கண்ணன் அவர்களும் ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கு நம் நன்றி உரியதாகுக.

திண்டுக்கல் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு, மதுரை கிழக்கு மாவட்ட அமைப்புக் கூட்டத்திற்காகக் கழக முதல்வரும், கழக அமைப்புசெயலாளரும், செ. கண்ணனும், திருச்சி மாவட்டப் பொருளாளரும், கோவை மாவட்டச் செயலரும் இரவு 9 மணியளவில் பேருந்து வழியாக மதுரை புறப்பட்டனர். அவர்களைக் கழராம்பன், மருத்துவர் கண்ணன், வையைநம்பி, அரசெழில், அழகுப் பாண்டியன், தமிழன்பன், பாலசுப்பிரமணியன், இராசு முதலியோர் வழியனுப்பி வைத்தனர்.

மதுரை மாவட்ட (வடக்கு)

கழக முதல்வர் பாவலரேறு அவர்களும் அன்பர்கள் பிறரும், இரவு 11 மணியளவில் மதுரை வந்து சேர்ந்தனர். அவர்களை நெடுநாளைய தென்மொழி அன்பர் திரு. தி. குமரப்பன். க.இ. வண்டி நிலையத்தில் வரவேற்று, மதுரை வழிப்போக்கர் விடுதிக்கு அழைத்துச் சென்றார்.

Scanned with CamScanner

மறுநாள் காலை 9 மணியளவில் மதுரை-கிழக்கு மாவட்ட அமைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சி தொடங்குமுன் தா. வாடிப்பட்டியிலிருந்து நீண்டநாளைய தென்மொழி அன்பரும், ஓய்வுபெற்ற தொடர்வண்டி நிலைய மேலாளரும், சிறந்த தமிழ், ஆங்கிலம்,இந்தி ஆகிய மும்மொழி அறிஞரும் ஆகிய புலவர் ஆ. பூ. பொன்னரசனார் (சொக்கலிங்கம்) க. மு. அவர்கள் அறைக்கு வந்து. பேசிக்கொண்டிருந்தார். பின்னர் வந்திருந்தவர்களில் மிக முகாமை யானவர்கள்: பாவலரேறு நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப் புச் செய்யும் அறிஞர். **த. முத்துக்குமரனார்.** (அவர்க்கு ஏறத்தாழ எண்பது அகவை ஆகியும் அவருடைய ஈடுபாடு மிகவும் பாராட் டத் தக்க வகையில் இருந்தது. இவர்போலவே பகலில் மழையில் நனைந்து கொண்டு வந்த இசையறிஞர் பண்டாரகர் **வீ.ப.கா. சுந்தர மும்** மிகக் குறிப்பிடத்தக்க அறிஞர். அண்மையில் இசைத்துறை யில் அவர் பெற்ற பண்டாரகர் பட்டத்தின் நினைவாகத் தென் மொழிக்கு உருபா இருபது அன்பளிப்பாக (அவர் அதைக் கோயி லுக்குச் செலுத்த வேண்டிய 'காணிக்கை' என்று சொல்லி)க் கொடுத்தார். அன்றைய மதுரை தெற்கு-மாவட்ட அமைப்பு நிகழ்ச்சியை ஒருவாறு மாலை $6\frac{1}{2}$ மணியளவில் முடித்துக் கொண்டு அங்கிருந்து பாவலரேறுவும் பிறரும் 7-30 மணிக்கு இராமநாத புரம் புறப்பட்டனர். குழந்தை ஈகவரசனும், இளஞ்சேரல் முது பாண்டியனும் மதுரையினின்று ஊர் திரும்பி விட்டனர். மதுரை வழிப்போக்கர் விடுதிச் செலவை அன்புடன் ஏற்றுக் கொண்ட தி. குமரப்பன் எங்கள் நன்றிக்குரியவராவர்.

முகவை-கிழக்கு மாவட்ட அமைப்பு

முதல்வரும், அமைப்புச் செயலாளரும், உதவியாளர் கண்ணனும் இராமநாதபுரம் உந்து வண்டி நிலையத்திற்கு 25-7-82 இரவு 10 மணியளவில் வந்து சேர்ந்தனர். அங்கு நடைபெறும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள் எவரையும் வண்டி நிலையத்தில் காணா மையால, இவர்களை அன்று இரவு மட்டும் தங்குவதற்கு ஒரு விடுதியை ஏற்பாடு செய்து கொண்டனர். கண்ணனின் ஊர் அதுவாகையால், அவர் மிதிவண்டி ஒன்றை எடுத்துக்கொண்டு, மறுநாள் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ள இடத்தைக் கண்டு பிடிக்க முயன்றார். மறுநாள் காலை 6 மணியளவில், ஏற்பாட்டாளர் வண்ணான்குண்டு புலவர் **இரா. சிவசண்முகம்**, நகரத்திற்கு வெளியே ஒருகல் தொலைவில் உள்ள தேவத்தான விடுதியில் ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிய வந்தது. காலை 7 மணியளவில் அங்கு இடம் மாற்றப் பெற்றது. சரியாக 9-30 மணியளவில் நிகழ்ச்சிக்கு அணியம் ஆனார்கள். புலவர் சிவசண்முகம் தமக்கு முதல்வர் வரவு நேரம் குறித்த மடல் அன்று வரை கிடைக்காமையால், அவரை உந்து வண்டி நிலையத்தில் எதிர்கொள்ளாமல் போனது

Scanned with CamScanner

பற்றி மிகவும் வருந்தி மன்னிக்க வேண்டும் என்று பலமுறை கேட்டுக் கொண்டார். பாவலரேறு, அவரின் உண்மையான அன்பு நிலைகளை உணர்ந்தவராகையால், அது பற்றி வருந்த வேண்டாம் என்று அன்புக் கட்டளையிட்டார்.

இராமநாதபுரம் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த மாவட்டம் தென்மொழியின் மிகப் பழைய அன்பர்கள் நிறைந்த மாவட்டம். திருவாளர்கள் பறம்பை அறிவன், தி. க. மும்முடி முகிலன், புலவர் சிவசண்முகம் க. கருப்பையா, சி. ச. கருப் பையா, மெய். அருண்மொழியன் போன்ற நீண்டநாள் தென்மொழி யன்பர்கள் எல்லாரும் இக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். பறம்பை அறிவன் பேரா. தமிழ்க்குடிமகன் முதலியோர்க்கு இணையர். நல்ல பொருளுடைமை அறிஞர், தூய உளத்தினர்; அரும் பண்பினர். தொடக்கத்தில் இருந்த அதே பொதுவுணர்வுடன் இன்னும் விளங்கு வது மிகவும் மகிழ்வையும் வியப்பையும் அளித்தது. இறுதியில் அவரே முகவை கிழக்கு மாவட்ட அமைப்பாளராகத் தேர்ந்தெடுக் கப் பெற்றார். தி.க. மும்முடி முகிலனும் சிறந்த பண்பினர்; அன் பினர். அவர்தாம் செயலராக அமர்த்தம் பெற்றார். புலவர் சிவ சண்முகம் பொருளரானார்.

புலவர் சிவசண்முகனார் எப்பொழுதும் சிரித்த, களங்கமற்ற முகத்தொடு பாவலரேறு அவர்களுடன் குழையக் குழையப் பேசிக் கொண்டிருந்தார். அன்புக்கும் அறிவுக்கும் மட்டுமே நெகிழ்ந் துருகும் பாவலரேறுவைப் பகலுணவுக்கு வண்ணான்குண்டுக்கு அழைத்து இசைவைப் பெற்றுவிட்டார் சிவசண்முகனார். வண்ணான் குண்டு இராமாநாதபுரத்திலிருந்து 15 கற்கள் கிழக்கே உள்ள கடற்கரை யோர ஊர். வழி நெடுகக் குண்டுங் குழியுந்தாம். மகிழுந்து வந்தது. அன்பர்களையெல்லாம் உணவுண்டுவரக் கேட்டுக் கொண்டு, துரையரசன், கண்ணன் இவர்களுடன் சிவசண்முகம் அவர் தம்பி நிலவழகன் ஆகியோர் அழைத்துச் செல்ல மகிழுந்தில் பாவலரேறு வண்ணான்குண்டு சென்றார். எவர் இல்லத்திலும் உணவு கொள்ள உடனே மறுத்துவிடும் பாவலரேறு சிவசண்முகம் இல்லத் தில் பகலுணவை ஏற்றுக்கொள்ள ஒரு கரணியம் இருந்தது. பாவலரேறு அவர்களின் தலைமையில்தான் திரு. சிவசண்முகத்தின் திருமணம் நடைபெற்றது. திருமணத்தில் பாவலரேறு அவர்களின் **'நூறாசிரியத்'**தின் முதல் பகுதியை அச்சிட்டுத் திருமணத்திற்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு படியை இலவயமாகக் கொடுத்தார். அந்த வகையில் பாவலரேறு அவர்களின் தனி அன்பைப் பெற்றவர் புலவர் சிவசண்முகம். அவர் தந்தையார், மற்றும் குடும்பத்தினர் அனைவரும் மிக்க அன்புடனும் மதிப்புட னும் பாவலரேறுவையும் அன்பர்களையும் வரவேற்று விருந்து புரந்து அனுப்பி வைத்தனர். வழியெல்லாம் பாவலரேறு, மற்ற

Scanned with CamScanner

அன்பர்களை விட்டுவிட்டுத் தாம் மட்டும் தமித்து விருந்துண்டதை எண்ணி உளம் மருகிக்கொண்டே வந்தார். மணி 4 அளவில் விடுதிக்கு வந்தனர். அன்பர்களிடம், அவர்களைத் தவிர்த்து உண வுண்டமைக்கும் காலந்தாழ்த்தியமைக்கும் பொறுத்துக் கொள்ளு மாறு பாவலரேறு வேண்டினார். மனம் சிறிது புலந்த நிலையில் இருந்த அன்பர்கள்கூடப் பாவலரேறுவின் வேண்டுகோளால் மனம் நெகிழ்ந்து மலர்ச்சியுற்றனர். நிகழ்ச்சி தொடர்ந்து நடந்து இரவு 8 மணியளவில் நிறைவுற்றது. மாலை 5 மணியளவில் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது, காவல்துறை ஒற்றர் ஒருவர் பொதுவுடையில் வந்து, பாவலரேறு அவர்களைக் கண்டு, சென்னை யிலிருந்து அவர்கள் வரவு பற்றிய செய்தி வந்ததாகவும், அவர் நம் இயக்க அமைப்புகளைக் கண்காணித்து அறிக்கை தருமாறு கேட்டிருப்பதாகவும் கூறினார். அவருக்குத் தக்க விடைகளையும் விளக்கங்களையும் கூறி அனுப்பி வைத்தார் பாவலரேறு.

நிகழ்ச்சிக்குப் பின்னர் அன்பர்கள் வினவிய அரசியல், இன வியல், மெய்யறிவியல் தொடர்பான சில கேள்விகளுக்கு மனம் நிறைவுறுமாறு பாவலரேறு விடைகள் கூறினார். 10 மணி அள வில் எல்லாரும் விடைபெற்றுச் சென்றபின், இரவு அங்கேயே தங்கிக் காலை 4 மணியளவில் புறப்பட்டுத் தூத்துக்குடி சென்றனர். கண்ணன் திருச்சி சென்றார். இராமநாதபுரத்தில் இருந்த பொழுது தங்கு செலவையும் உணவுப் பொறுப்பையும் புலவர் திரு. சிவசண் முகனார் ஏற்றுக்கொண்டார். அவர்க்குத் தலைமையகம் நன்றி கூறுகிறது.

திருநெல்வேலி-தெற்கு மாவட்ட நிகழ்ச்சி

இராமநாதபுரத்திலிருந்து தூத்துக்குடி வந்து சேர்வதற்குக் காலை 9 மணியாயிற்று. பேருந்து வண்டி நிலையத்திற்கு வரச் சொல்லி, புலவர் திரு. த. முல்லைவழுதி அவர்களுக்குத் தொலைவரி கொடுத்திருந்தும், வண்டி நிலையத்தில் அவரைக் காணவில்லை. பின்னர் அவர் சென்னை சென்றுள்ளதாக அவர் வீடு சென்று கேட்டறிந்தனர். வண்டி நிலையத்தில் நின்றுகொண்டிருக்கையில் வ.உ.சி. கல்லூரியில் தட்டச்சராகப் பணியாற்றும் திரு. வைத்திய நாதன் என்பவர் கண்டு பாவலரேறு அவர்களுடன் பேசியிருந்து விட்டு மாலை நிகழ்ச்சிக்கு வருவதாகக் கூறிச் சென்றார். அவர் போனபின் திரு. த. அன்பழகன் குடும்பத்துடன் வண்டி நிலையம் வந்தார். அவர் தூத்துக்குடி அரசினர் தங்குமனையில் முதலமைச் சரும், அமைச்சர்கள் பிறரும் வருவதால், இயக்க நிகழ்ச்சிக்கு இடம் கிடைக்கவில்லை என்றும், அங்குப் போய்ப் பார்த்துவிட்டு வருவதாகவும் கூறினார். பின்னர் எல்லாரும் போய் இராமையா தங்கு விடுதியில் ஓர் அறை எடுத்து, பாவலரேறு அவர்களை அதில் இருக்கச் செய்துவிட்டுத் துரையரசனும் அன்பழகனும் அரசினர்

தங்கும் விடுதிக்குச் சென்று நிகழ்ச்சி இராமையா விடுதியில் நடைபெறும் என்று அறிக்கை ஒன்றை ஒட்டிவிட்டுத் திரும்பினார். திரு. த. அன்பழகன் தென்மொழியில் இரண்டு மூன்றாண்டுகள் பணியாற்றிய பண்பாளர்; கடமை வீரர்; சிறந்த தமிழறிஞர்; பாவலர். தம் உடல்நலக் குறைவாலும் குடும்பநிலையாலும், தென்மொழி சென்னை சென்றபின் பின்தொடர இயலாமற் போனவர். அவரும் அமைப்புச் செயலரும் வெளியில் சென்றிருக்கையில், அன்பழகன் குடும்பம் கொண்டு வந்திருந்த சிற்றுண்டியை அருந்திவிட்டுப் பாவலரேறு அவர்கள் முதலில் வந்திருந்த நெடுநாளைய தென்மொழி அன்பரும் பொறியாளரும் ஆகிய திரு. சுப்பு அவர்களுடன் பலவாறான செய்திகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அறையைத் தேடிப் பதிவுசெய்யவே நேரம் கடந்துவிட்டதால் நிகழ்ச்சி பிற்பகல் நடத்த முடிவெடுக்கப் பெற்றது. பகல் 11 மணியளவில் புலவர் மூல்லைவழுதி சென்னையிலிருந்து திரும்பிவந்து பாவலரேறுவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, எதிர்பாராத வகையில் தாம் உடனே சென்னை செல்ல வேண்டியதாகப் போய்விட்டதென்றும், தங்கும் விடுதி நிலைமை இதுவென்றும் கூறிப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதன் பின்னர் நேரிலும் வந்து அமைவு கூறினார். பாவலரேறு அதனைப் பொருட்படுத்த வேண்டாமென்று கூறி, அவர் அன்பைப் போற்றிக் கொண்டார்.

பின்னர், தென்மொழி மறவர் கோட்டை இராவணன் வந்தார். இராவணன் சிறந்த செயல்மறவர். தக்க நேரத்தில் தக்க வினையை முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். எதையும் பிறரிடம் அஞ்சாமல் எடுத்துக் கூறவும் செயல்முடிக்கவும் திறம் பெற்றவர். அவர் வந்த பின்னர் உணவு முடிந்தது. பிற்பகல் 2 மணியளவில், நெய்வேலியில் 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பொறியாளர்கள் இர. கதிரொளி, ச. குத்தாலம், மற்றும் சங்க. தமிழ்ச் செல்வன், ஏரல் தமிழ்க் கழகத் தலைவர் புலவர் ச. சிவசங்கு முதலியோர் வந்தனர். அத்துடன் பாவலரேறு அவர்களைக் குமரிமாவட்டத்திற்கு அழைத்துப் போவதற்காக, நெடுநாளைய தென்மொழி அன்பர்கள் மு.குமரேசன அவர்களும், அவர் தம்பி தா.மு. தமிழ்ப்பித்தன் அவர்களும் வந்திருந்தனர். கூட்டம் நிறைவுற அமைந்திருந்தது. பிற்பகல் முழுவதும் நிகழ்ச்சி சிறப்புற நடந்தது. நெல்லை, தெற்கு மாவட்டத்திற்கு முதுபுலவர் ச. சிவசங்கு அவர்கள் தலைவராக அமர்த்தப் பெற்றார்.

திரு. சிவசங்குப் புலவர் ஓய்வுபெற்ற தமிழாசிரியர். சிறந்த பண்பினர். ஆற்றல் வாய்ந்த தமிழறிஞர். பாவாணர் மேலும் பாவலரேறு அவர்கள் மேலும் ஆராக் காதலர். திருவள்ளுவரைத் தெய்வமாக வணங்கும் தூய அறநெறியாளர். குழந்தைபோலும் கள்ளங் கவடற்ற அன்பினர். எப்பொழுதும் மலர்ந்த முகமும்,

நகைத்த விழிகளும், சிரித்த வாயும் உடைய சான்றாண்மையர். நாள்முழுதும் அவரிடம் பேசிக் கொண்டிருந்தாலும் சலிப்பே ஏற்படாதவண்ணம கலித்தொகை, குறுந்தொகை, அகநானூறு முதலிய நல்லிலக்கிய உரையாடலில் திளைக்க வைக்கும் புலமை மிக்கவர். தொல்காப்பிய நூற்பாக்களை அடிக்கடி கூறி இற்றை மரபுதிரிந்த போக்குடன் சுட்டி, மனம் வெதும்பும் தூயமொழிப் பற்றுடையவர். தமிழையும், தமிழ் இலக்கிய மரபுகளையும், தமிழ்ப்பண்பையும் சிதைக்கும் சிதடர்களை வெகுண்டு சீறும் வீரத்தின் தொகுப்பு அவர். அவரை மாவட்ட அமைப்பாளராக அமைத்தது, பாவலரேறுவிற்கு மிகுந்த நிறைவாக இருந்தது. கோட்டை இராவணன் மாவட்டச் செயலராகவும், தென்மொழி அன்பழகன் பொருளாளராகவும் அமர்த்தப் பெற்றனர்.

தூத்துக்குடி நிகழ்ச்சி மாலை 6-30 மணிக்கு முடிவுற்றது. கழக முதல்வர் அவர்களை நாகர் கோயிலுக்கு அழைத்துச் செல்ல வந்திருந்த திரு. மு. குமரேசன், திரு. தா.மு. தமிழ்ப்பித்தன் ஆகியோர் இருவருடனும், திருவாளர்கள் இராவணன், சங்க. தமிழ்ச்செல்வன் ஆகியோரும் பாவலரேறுவுடன் நெல்லை புறப்பட்டனர். உந்துவண்டி நிலையத்தில் சங்க. தமிழ்ச்செல்வன் அனைவர்க்கும் இரவுஉண்டி வாங்கிக் கொடுத்தார். நாகர்கோயில் போய் அங்குள்ள குமாரசாமி விடுதியைச் சென்றுசேர இரவு 1-30 மணி ஆகிவிட்டது. சங்க. தமிழ்ச் செல்வனும் இராவணனும் நெல்லையில் நின்று கொண்டனர்.

குமரிமாவட்டம் அமைப்பு நிகழ்ச்சி

பாவலரேறும் அமைப்புச் செலயாளர் தென்மொழி ப. துரையரசனும் கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறையையும், திருவள்ளுவருக்குச் சிலை வைப்பதற்காக முயற்சி யெடுத்த இடத்தையும் பார்க்க விரும்புவதாகச் சொல்லியிருந்ததால், மறுநாள் 23-7-82 அறிவன் காலை 5 மணியளவில் எழுந்து திரு. குமரேசன் அவர்களுடன் கன்னியாகுமரி புறப்பட்டனர். இலேசாகத் தூறல் இருந்ததால் எதையும் விரிவாகப் பார்க்க இயலாமல் 10 மணியளவில் விடுதிக்குத் திரும்பினர்.

விரைவில் குளித்து உண்டிமுடித்து நிகழ்ச்சிக்கு அணியமாக 11 மணி ஆகிவிட்டது. திரு. மு குமரேசன் அவர்கள் நீண்டநாளைய தென்மொழியன்பர். அவர் தம்பி திரு. தமிழ்ப்பித்தன் அவர்களும் நல்ல தமிழ்த் தொண்டர். இருவரும் மிக்க ஆர்வத்துடனும் அக்கறையுடனும் அமைப்பு நிகழ்ச்சி சிறப்பாக அமையவேண்டி அனைத்து முயற்சிகளையும் விரிவாகச் செய்திருந்தனர். ஆயிரக்கணக்கில் அறிக்கைகள் அடித்து அண்டையயல் சிற்றூர்ப் புறங்களிலும் நகரிலும் பரப்பியிருந்தனர். நூற்றுக் கணக்கில் பெரிய சுவர் அறிக்கைகளையும் அடித்து நகர் முழுவதும் ஒட்டியிருந்தனர். நாகர்

கோயிலில் உள்ள பொதுத்தொண்டர்கள், தமிழன்பர்கள் எல்லாரிடமும் பாவலரேறு வருவதை நேரில் போய்க் கூறி அழைப்புத் தந்தனர். அவர்கள் முயற்சி வியக்கத் தக்கதாய் அமைந்திருந்தது.

இம் முயற்சிகளின் விளைவாக, குமரிமாவட்ட அமைப்புக்கூட்டம் மிகச் சிறப்பாகவும் பயனுடையதாகவும் அமைந்திருந்தது. அன்பர்கள் வேறு எங்கும் இல்லாதபடி மிகுதியாகக் கூடினர். அம் மாவட்டத்தில் உள்ள முதுபெருந் தலைவர்களாகிய பெரியவர் ச. முத்துச்சாமி (அகவை 83; பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையவர்களின் நண்பர்), எம். சமரசம், 'கன்னியாகுமரி' என்னும் இதழ் ஆசிரியரும், திருத்தமிழர் இயக்கத் தலைவரும் ஆகிய எசு. மணி (அகவை 60 இருக்கும்), குமரிமாவட்டத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் புலவர் கு. பச்சைமால். க.மு. செயற்குழு உறுப்பினர் நா. பாலரசு, 'இந்துபூமி' ஆசிரியர் புத்தளம் சு. முருகேசன், குமுகப் புதுவாழ்வு நிறுவனத்தின் செயலாளர் த.செ. இராம்குமார், நகர தி.க. தலைவர் மருத்துவர் தியாகராசன், மாவட்டத் தி. க. துணைச் செயலர் கே. பிரபாகரன், எம். சமரசம், ப. பலவேசம், தேசிய விடுதலைப் போராட்ட மறவர் வெ. அருணசலம், சு. அவ்வையார், புதுவை அரசுப் பாரதி பட்டயம் பெற்ற புலவர் சி. பா. ஐயப்பன் முதலியோர் வந்திருந்தனர். தி. க. தலைவர்கள் பாவலரேறு அவர்களுக்குக் கறுப்பு மேலாடை போர்த்தியும், மாலையணிவித்தும், அவர் உடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டும் சிறப்புச் செய்தனர்.

பாவலரேறு அவர்கள் வந்திருந்த அன்பர்களிடம் காலையும் மாலையும் ஏறத்தாழ நான்கு மணி நேரம் இயக்க நிலைகளைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். அமைப்புப் பணி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. திரு. சு. நக்கீரன் மாவட்ட அமைப்பாளராக அமர்த்தப்பெற்றார். திரு. குமரிச்செல்வன் மாவட்டச் செயலராகவும் திரு. தா. மு. தமிழ்ப் பித்தன் பொருளராகவும் அமர்த்தப் பெற்றனர். மற்று ஆர்வமுற்ற சிலர் தம் தம் பெயர்களைக் கொடுத்துள்ளனர். தகுதியானவர்கள் ஆய்வுக்குள்ளாகி, விரைவில் முழுமையாக அமர்த்தம் பெறுவர்.

நாகர்கோயில் தங்கலுக்கும் உணவுக்கும் மட்டும் பொறுப் பேற்றுக் கொண்டதோடு அமையாமல் அனைத்து முயற்சிகளிலும் தாமே முன்னின்று, உடல், பொருள், உணர்வு ஆகிய மூவழிகளிலும் அரும் உழைப்பைத் தந்த, அன்புக்கும் மதிப்பிற்குமுரிய திரு. குமரிச் செல்வன் (மு. குமரேசன்) அவர்களின் பெருந்தகைமையையும், உயர்ந்த தொண்டுள்ளத்தையும், நல்லுணர்வையும், பாவலரேறு அவர்களின் மேல் கொண்ட அன்பையும் எவ்வளவு போற்றினாலும் தகும். அவருக்கு உறுதுணையாகத் தோளொடு தோள் நின்று இயங்கும் அவரின் இளவல் திரு. தா. மு. தமிழ்ப் பித்தனும் பாராட்டுக்கும்

(தொடர்ச்சி 37-ஆம் பார்க்க)

Scanned with CamScanner

இந்திச் சிக்கலும் இறுதித் தீர்வும்!

(சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தன், வழக்குரைஞர், கோபி.)

11) தேசிய இனங்களுக்குச் சமநிலையும் சமநயன்மையும் கிடைக்க, ஒருகால் 'நேர்வழித் தீர்வுகள்' கிடைக்கவில்லையெனில். அனைத்துத் தேசிய இனங்களின் மேல் 'சமச்சுமையை' ஏற்றித் தத்தம் மொழி, பண்பாட்டுத் துறைகளில் இந்திய மக்கள் யாவரும் சமநிறையைப்' பெறக் கூடிய 'எதிர்மறை வழிமுறையால்" (Negative Method) ஆட்சிமொழிச் சிக்கலுக்குச் சிறந்த ஒரு தீர்வைக் காண வேண்டும்.

இறுதித் தீர்வு

1) இந்தியை ஆட்சிமொழித் தகுதியிலிருந்து அகற்றி, அதன் தொடர்பான அனைத்து அரசமைப்புச் சட்ட நெறிகளையும் ஆட்சி மொழிகள் சட்டத்தையும் நீக்க வேண்டும். இனி, எந்த ஒரு மொழியையும் 'ஆட்சிமொழியாக' (Official Language) ஆக்கக் கூடாது.

2) அ) இந்திய ஒன்றியத்தின் 'குறிப்பிட்ட அரசுப் பணிகளுக்கு மட்டும் பயன்படுத்துவதற்கும்,

ஆ) நடுவண்—மாநில அரசுத் தொடர்புகளுக்கும்,

இ) மாநிலங்களுக்கிடையிலான தொடர்புகளுக்கும்,

ஈ) தலைமை அறமன்ற நடவடிக்கைகட்கும்,

எ) உயர் அறமன்றத்திலிருந்து செல்லும் மேன்முறையீடுகளுக்கும்,

ஏ) அதிகார முறைப்படியான நடுவண்-மாநிலச் சட்டங்கள் சட்ட முன்வரைவு ,சடுத்தச் சட்டங்கள், நெறிகள், துணை நெறிகள் குறிப்பாணைகள், அறிக்கைகள் இன்னபிறவற்றிற்கும்,

ஆகிய ஆறு பயன்பாடுகளுக்கு மட்டும் ஆங்கிலம் 'வரையறுக்கப்பட்ட தொடர்பு மொழியாகப் (Restricted Link Language) பயன்படுத்தப்பட வேண்டும்.

3) மாநில மொழிகளின் இடத்தைத் தற்போது கைப்பற்றிக் கொண்டிருக்கும் ஆங்கிலத்தை அகற்றி, அந்தந்த மாநில மொழிகளே மெய்யான — முழுமையான—நடைமுறையளவில் அனைத்துத் துறைகளிலும் இயங்கும் ஆட்சிமொழிகளாக அந்தந்த மாநிலங்களில் ஆக்கப்படவேண்டும். ஒவ்வொரு மாநில மொழியும், அம் மாநில அரசுப் பணித்துறைகள் அனைத்திலும் திறனோடு இயங்கும் அரசு மொழியாகவும், பயிற்று மொழியாகவும், அறமன்ற மொழியாகவும் அந்தந்த மாநிலத்தில் ஆக்கப்பட வேண்டும்.

Scanned with CamScanner

4) நாடாளுமன்ற அவைகளில் ஆங்கிலத்திலோ அல்லது 15 தேசிய மொழிகளிலுமோ நடவடிக்கைகள் நடைபெறும். உரிய மொழி பெயர்ப்புப் பொறி அவ்வப்போது இயங்கும். நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாநில மொழிகளில் அந் நடவடிக்கைகள் தரப்பட வேண்டும்.

5) மாநிலங்களிலுள்ள நடுவண் அரசின் அலுவலகங்கள் பொது மக்களுடன் தொடர்பு கொள்ளவும், மாநிலங்களில் அமைந்துள்ள நடுவண் அரசின் அலுவலகங்கள் மாநில அரசுகளோடு தொடர்பு கொள்ளவும், அந்தந்த மாநில ஆட்சிமொழிகளே பயன் படுத்தப்பட வேண்டும். மாநிலத்தில் பணிபுரியும் மத்திய அரசின் ஊழியர்கள் அந்தந்த மாநில ஆட்சிமொழியை அறிந்திருக்க வேண்டும்.

6) 'அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளையும்' (Examinations for All India Services) பொதுப் பணியாளர் பொறுப்புக்குழுவால் (Union Public Service Commission) நடத்தப்படும் தேர்வுகளையும்', தொடர்பு மொழியான ஆங்கிலத்தில் நடத்தலாம்; அல்லது 15 தேசிய மொழிகளிலும் நடத்தலாம். அப்போது மாநில அடிப்படையில் பங்கீட்டு முறையைக்(Quota System) கடைப்பிடித்தல் வேண்டும்.

7) அறிவியல், தொழில் நுணுக்கத்துறை போன்ற பாடத் துறைகளில் அனைத்து நாட்டுக் குறியீட்டுச் சொற்களையும், கலைச் சொற்களையும் (International Terminology) இந்திய மொழிகளில் எல்லாவற்றிலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

8) எல்லா மாநிலங்களிலும் தொடக்கக் கல்வி மட்டத்திலிருந்தே மாநில மொழிகளுடன் ஆங்கிலத்தையும் கட்டாயமாகப் பயிற்றுவித்து, ஒரே சீரான இருமொழிக் கொள்கையை [மாநில மொழி மற்றும் ஆங்கிலம்] செயற்படுத்த வேண்டும். செம்மையான ஆங்கில மொழி அறிவினையும், பயிற்சியையும், இந்திய மாணவர்கள் அனைவரும் ஒரே சீர்மையோடு (Uuiformity) பெறுவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் அடிப்படைக் கொள்கைகளையும் நடுவண் அரசின் கல்வித்துறை செய்தல் வேண்டும். உலக அளவிலும் தொடர்பு பெற ஆங்கிலம் உதவும்.

9) ஆங்கிலத்தையும், இந்திய தேசியமொழி என ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அரசமைப்பில் VIII ஆம் அட்டவணையில் 16-ஆவது தேசியமொழியாகச் சேர்த்துவிட வேண்டும்.

10) இந்த அடிப்படைக் கொள்கைகளுக்கு ஏற்றபடி மேலும் தேவையானவற்றை, வல்லுநர்களுடன் ஆராய்ந்து அறிந்து அவற்றை அரசமைப்பில் நெறிகளாகவும், வேறு தனிச்சட்ட முறைகளாகவும் செய்ய வேண்டும்.

Scanned with CamScanner

மேற்சொன்ன 'இறுதித் தீர்வை' மேலோட்டமாகப் பார்த்தால்' 'தொடர்பு மொழி' என்ற பெயரால் இந்திக்கு மாறாக ஆங்கிலத்தை 'ஆட்சி மொழியாக'' ஆக்கும் ஒரு மாற்றுத் திட்டத்தை வலிந்து கூறுவது போலத் தோன்றும். ஆனால் அக் கருத்து சரியன்று.

குறிப்பிடும் புதிய தீர்வில், ஆங்கிலம் ஆட்சிமொழித் தகுதியைப் பெறாது. இந்தியும் வல்லாண்மை நிலையை இழந்துவிடும். மாநில மொழிகளும் வளரும். 'வரையறுக்கப்பட்ட தொடர்பு மொழியாக' மட்டுமே ஆங்கிலம் இருக்கும்.

தற்போதைய அரசமைப்பில் இந்திக்குத் தரப்பட்டிருக்கும் அத்தனைத் துறைகளிலும், புதிய தீர்வின்படி ஆங்கிலத்தைப் பயன்படுத்தத் தேவையில்லை.

பயிற்றுமொழியின் இடத்தையும், அனைத்து இந்தியத் தேர்வுகளின் இடத்தையும், அறமன்ற நடவடிக்கைகளையும், மாநில அனைத்து அரசுப் பணிகளையும், அந்தந்த மாநில மொழிகளே ஆங்கிலத்திற்கு மாறாக, ஏற்றுக் கொண்டுவிடும்.

நடுவண் அரசு சார்ந்த நிறுவனங்கள், அலுவலகங்கள், வணிகக் கழகங்கள் போன்றவை, மாநில அரசுகளுடனும் மாநில மக்களுடனும் முறையே தொடர்பு கொள்வதற்காக ஆங்கிலத்திற்கு மாறாக (இந்திக்கும் மாறாக) மாநில மொழிகளே பயன்படுகின்றன.

இந்திய ஒருமைப்பாட்டையும், சீர்மையையும், இன்றியமையாத் தேவையையும் கருதி, எஞ்சியிருக்கும் அறுவகைச் செயல்கள் மட்டுமே ஆங்கிலத்தில் நடைபெறும். அவற்றிற்குரிய ஆங்கில மொழி அறிவையும், பயிற்சியையும் தத்தம் மாநில மொழிகளின் வளர்ச்சிக்கு எவ்வகை இடையூறும் இன்றி, அனைத்து மாநில மக்களும், சீர்மையோடு பெற்றுக்கொள்கின்றனர்.

ஆகவே ஆங்கிலம், குறிப்பிட்ட அளவில் இன்றியமையாத் தொடர்பு நிலைகளுக்காக மட்டும் பயன்படுத்தப்படுகிற 'தொடர்பு மொழியாக' மட்டுமே செயல்படும். மாநில மொழிகளின் இயல்பான விரைந்த வளர்ச்சியை வெறும் தொடர்பு மொழியான ஆங்கிலம் தடுக்க முடியாது.

தமிழகம் வழிகாட்டுமா?

இந்திய மக்களிடம் இயல்பான ஒருமைப்பாடும், வேற்றுமைகளில் ஒற்றுமை காணும் பண்பும் இயற்கையாக என்றும் அமைந்திருக்கவில்லை. இன்றைய இந்தியாவின் 'அரசியல் ஒருங்கிணைப்பும், (Political Integration) தேசிய ஒருமைப்பாட்டுணர்வும், ஆங்கிலேய அரசுக் காலத்தில்தான், விடுதலை இயக்கத்தின் மூலமாக உருவாயின.

Scanned with CamScanner

இந்திய ஒருமைப்பாட்டைப் பேணிக்காக்க வேண்டிய இன்றியமையாக் கடமை, இந்தி பேசும் மாநிலத்தவர்க்கும், மிகமிகத் தேவை. அஃது, இந்தி பேசா மாநிலத்தவர்களுக்கு மட்டுமே உரிய தனிப்பொறுப்பன்று.

இந்திதான் ஆட்சிமொழி என்றால், அறிவு நிலையிலும், உணர்வு அழுத்தங்களிலும், வரலாற்று மரபிலும் தமிழகத்தை ஆழ்நிலையில் தாக்கிவிடும்.

சென்ற 35 ஆண்டுகளாக அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்திக் கொண்டு வரும் ''ஆட்சிமொழிச் சிக்கலையும்'', அதன் வேர்ப் பகுதியான 'இந்தி மொழி வல்லாண்மையையும்', மேற்சொன்ன 'இறுதித் தீர்வு' முறையாகவும் முற்றாகவும் தீர்த்து விடும்.

பன்மொழித் தேசிய இனங்கள், ஒன்றின்மேல் மற்றொன்று மொழி வல்லான்மையைச் செலுத்தாமல்—சமத் தகுதியையும், சம உரிமையையும், சம நிறைவையும், சம நயன்மையையும், பெற்று வளர்ந்தோங்குவதற்கு —இந்தி பேசும் மாநிலத்தவர், 'சமச்சுவை' அடிப்படையில் இன்றைய அரசமைப்பைத் திருத்துவதற்கு உறு துணையாக இருத்தல் வேண்டும்.

இந்தி பேசா மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிக் கட்டுப்பாட்டைக் கடந்து இந்திய ஒற்றுமையைக் கருதி அவ்வகை அரசமைப்புத் திருத்தத்திற்காக மற்றவர்களுடன் இணைந்து முனைப்புடன் செயல்பட வேண்டும்; அல்லது நடுவண் அரசின் ஆளுங் கட்சியே, முன்நின்று ஆவண செய்து, உரிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை வலிவைத் திரட்டி 'இறுதித் தீர்வை' அரசமைப்பில் இடம் பெறச் செய்யவேண்டும்; அல்லது அனைத்திந்திய ஒருமைப்பாட்டைக் கருதி, இந்தி பேசும் மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி வேறுபாடின்றி அரசமைப்புத் திருத்தத்திற்காக ஆவன செய்தல் வேண்டும்.

இம்மூவகை வழிகளில் ஏதாவது, ஒன்றைக் கடைப்பிடித்து, மேற்சொன்ன இறுதித் தீர்வை ஏற்று, நடைமுறைப் படுத்தினாலன்றி, நிலையான இந்திய ஒருமைப் பாட்டை, முறையாகப் பெற முடியாது.

''வேற்றுமைகளில் ஒற்றுமை'' காணும் 'மொழி உரிமைத் தீர்வைச்' செயற்படுத்தத் தமிழகம் முன்னோடியாய் நின்று, வழிகாட்டுமா? ''செய்தக்க, செய்யாமையானும் கெடும்''

குறள்—(466)

இக் கட்டுரைத் தொடர் **தென்மொழி** விற்பனையகத்தில் நூல் வடிவில் கிடைக்கும். விலை உரு:1 **விற்பனையாளர்க்கு** 10% கழிவு.

உலகத்தமிழீழ மாநாட்டுத் தலைமைப் பேருரை!

விடுதலை இயக்கம் வழிமாறிச் செல்கிறது

— எட்வர்டு பெனடிக்டு.

அடிமைத்தனத்திலிருந்தும் ஒடுக்குமுறையிலிருந்தும் ஈழத் தமிழரை விடுவிப்பதில் எமக்குள்ள கடமையை உலகுக்கு எடுத்துக் காட்டவே நாம் இங்குக் கூடியுள்ளோம். பதவியிலும் அதிகாரத்திலும் சாய்காலிலும் அரசியல் அறிவிலும் வேறுபட்டவர்கள் ஒரே அணியில் திரண்டுள்ளோம்.

ஒடுக்குமுறை, ஓரவஞ்சகம் போன்ற சிறிய செய்திகள் பற்றி நாம் கவலைப்படவில்லை. ஆறு கோடித் தமிழரும் 'இஃது எங்கள் தாயகம்' என்று உரிமை கொண்டாட ஒரு தாயகம் இல்லை என்பதுவே எமது கவனத்தை ஈர்க்கும் செய்தி. இங்கே தமிழர்கள் கூடியிருக்கிறோம். இஃது எனக்குப் புத்துணர்வைத் தருகிறது. இக் கூட்டம் தமிழருக்கு அதிகாரத்தைத் தருகிறது. இந்த அதிகாரம் உயர்ந்த நோக்கங்களை நிறைவேற்றப் பயன்பட வேண்டும்.

நாம் தமிழர். இந்த உயர் பெருமைக்குரிய நிலையை நாம் உலகில் யாருக்கும் தாரைவார்த்துக் கொடுத்துவிட பரிமாறிக் கொள்ள அணியமாக இல்லை. உலகிலுள்ள எந்த வல்லமையாலும் எம்மை அடக்கிவிட முடியாது.

மாந்த உரிமைகள் அரசிடமிருந்து வருவதில்லை. அவை இறைவனால் அருளப்பட்டவை. இம் மந்திரச் சொற்கள் இம் மாநாட்டு மண்டபத்திலிருந்து புறப்பட்டு எங்கும் எதிரொலிக்கட்டும். நண்பர்களுக்கும் பகைவர்களுக்கும் எமது நலன் விரும்பிகளுக்கும் எம்மை அழிக்க விரும்புவோர்க்கும் இந்த நற்செய்தி கேட்கட்டும்!

"தமிழீழ மக்களின் ஆணையை நடைமுறைப் படுத்தும் பொறுப்பு புதிய தலைமுறையிடம் கையளிக்கப்பட்டுவிட்டது. இப் புதிய பிறங்கடையில் அரசியல்காரர்களும் பாவலர்களும் மெய்யறிவாளர்களும் மருத்துவர்களும் உள்ளனர். இதில் இயல் நடையினரும் தீவிரப் போக்கினரும் உள்ளனர். அறிவாளிகளும் துணிவினைச் செயல் வீரர்களும் இதில் உள்ளனர். இவர்களைப் படி நிகராளியராகக் கொண்டவர்களே தமது உரிமைக்கோரிக்கையை உலகறிய எடுத்துரைக்கவும் விடுதலைப் போரில் முன்னேறிச் செல்லவும் இங்கு கூடியுள்ளார்கள்.

இந்த ஆற்றல்கள் 'விடுதலைப் போராளிகள்' என்ற சொல்லின் எல்லா பொருள்களிலும் விடுதலைப் போராளிகளே. நாம் விடுதலைப் போராட்டத்துக்கான பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு விட்டோம். இப் பணியிலிருந்து நாம் பின்வாங்கமாட்டோம்.

Scanned with CamScanner

தமிழர் விடுதலை இயக்கம் உறுதியாக நிலைத்து விட்டது. அது வாடி அழிந்து விடும் என்று நினைப்பது சிங்களத்தின் கற்பனையாகவே முடியும்.

அஞ்சுவதற்கு எதுவுமில்லை. எம்மை அச்சம் பற்றிக்கொண்டுள்ளது போன்ற ஒரு தோற்றம் ஏற்பட்டுள்ளது. நாம் அச்சமும் கவலையும் குழப்பமும் கொண்டவர்களாகி விட்டோம். இஃது ஒரு கொடிய நோய். இந் நோயிலிருந்து நாம் முழுமையாக விடுதலை பெற வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தை வரலாறு வலிமையற்ற கோழைகளிடம் ஒப்படைப்பதில்லை; வீரஞ்செறிந்தவர்களிடமே விடுதலைப் போராட்டம் ஒப்படைக்கப்படுகிறது.

தமிழர்களுக்குத் தன்னாட்சி உரிமை உண்டா என்பதை ஆராய இங்கே நாம் கூடவில்லை. ஏனெனில், தன்னாட்சி எமது பிறப்புரிமை. உருவாகும் தமிழீழம் பிழைத்து வாழுமா என்பது பற்றியும் நாம் ஆராயப் போவதில்லை. ஒரு சிறிய நாட்டைச் சிறிய அரசுகளாகப் பிரிக்கலாமா, கூடாதா, என்பது பற்றி ஆராயவும் நாம் இந்த மாநாட்டைக் கூட்ட வில்லை.

1977-ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலே தமிழீழ மக்கள் அளித்த தமிழீழ ஆணையை நடைமுறைப்படுத்தித் தமிழீழம் உருவாக்கும் வழி வகைகளை-நடைமுறையைப் பற்றி-ஆராய்ந்து முடிவெடுக்கவே நாம் இங்குக் கூடியுள்ளோம்.

தமிழீழத் தமிழர்கள் இழந்த தமிழீழத் தாயகத்தை மீட்க இறுதியாகவும் உறுதியாகவும் முடிவு செய்துவிட்டார்கள். அவர்கள் அதற்குக் குறைந்த எதற்காகவும் உடன்பாடு செய்யப் போவதில்லை என்ற உண்மையைத் தமிழகத்திலிருந்து வந்துள்ள மாண்புமிக்க பேராளர்கள் தமிழகமெங்கும் நாவலிக்கக் கூவியுரைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழீழம் சிக்கல் வாய்ந்த செயல். ஆனால், அதனை அடைவது தவிர்க்க முடியாத பொறுப்பு ஆகும்.

தமிழீழத் தலைவர்களாகிய திரு. அமிர்தலிங்கம், திரு. சிவசிதம்பரம் ஆகிய இருவரும் கடந்த 30 ஆண்டுகளாக ஆற்றிய தொண்டுகளை நாம் நன்றியோடு ஏற்றுக் கொள்கிறோம்; என்னைவிட அவர்களை யாரும் உயர்வாக மதிக்க முடியாது. தமிழர் விடுதலை இயக்கத்தின் இன்றைய போக்குப் பற்றிய கருத்துணர்வை நான் எடுத்துக் கூறினால் அவர்கள் இருவரும் அவர்களை அவமதிப்பதாகக் கருதமாட்டார்கள் என நம்புகிறேன். வெவ்வேறு மக்கள் அவர்களது இன்றைய தொழிற்பாட்டை வெவ்வேறு கோணங்களில் நோக்குகிறார்கள்.

Scanned with CamScanner

தமிழர் விடுதலை இயக்கம் வழிதவறிச் செல்வதாகவே எமக்குத் தோன்றுகிறது; அது குடை சாய்ந்துவிட்டது; அது தனது வேகத்தை இழந்துவிட்டது; அஃது அதன் தீயுமிழும் தன்மையை இழந்துவிட்டது என்றே தோன்றுகிறது.

விடுதலை இயக்கத்தில் தயக்கம், விருப்பின்மை வளர்ந்து வருகின்றன. தமிழீழ ஆணையை முற்றாகக் கைவிடும் நாட்டம் பெருகியுள்ளதாகவே தோன்றுகிறது.

இம்மதிப்பீடு உண்மையாக இருந்தால் எல்லோரும் இணைந்து மீண்டும் அதனை-இயக்கத்தைச் சரியான பாதைக்கு அழைத்து வருவோம். (தவறாக இருந்தால் நான் என்னைத் திருத்திக் கொள்வேன்.) இன்றைய காலக்கட்டம் மிகவும் முகாமையானது. இது விழா எடுப்பதற்குரிய நேரமன்று இச் செய்தி தொடர்பான நேர்மையற்ற கலந்துரையாடலுக்கும் இது வேளையன்று.

இன்று எம்மை எதிர்நோக்கும் ஒரே சிக்கல் விடுதலையா, அடிமைத்தனமா என்பதுதான்.

தமிழீழ விடுதலை இயக்கம் எங்களையெல்லாம் விடப் பெரிது. விடுதலைக்காக நாம் பல உயிர்களை இழந்து விட்டோம். இன்னும் பலர் தங்களை ஈகம் செய்ய நேரிடும். மக்கள் உயிர் இழந்தால் மீண்டுவரார் என்னும் இயல்பு படைப்போனின் கொடை. ஆகவே, எவ்வகை நோக்கமுமின்றி எமது உயிர் வீணே அழிய நாம் இடம் தரலாகாது.

தலைவர்கள் மக்களுக்குத் தலைமை தாங்க வேண்டும். வட்டுக் கோட்டைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட நாளிலிருந்து நாம் ஒழுங்காகப் பின்பற்றி வந்த பாதையிலிருந்து தலைமைப்பீடம் நெடுந்தூரம் வழி தவறிச் சென்று விட்டதாகவே தோன்றுகிறது.

அரசியலில் விழிப்புணர்வும், அரசியல் பங்களிப்பும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதை நாமனைவரும் கருத்திற் கொள்ள வேண்டும். எல்லா மட்டங்களிலும் இந்த ஒன்றிணைப்பு வேண்டும்.

தமிழீழ விடுதலை என்ற சிக்கலான பணியில் எல்லா மக்களும் குழுக்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும். ஒரு சிலர் மட்டும் விடுதலையை வென்றெடுக்க முடியாது. அரசியல் மேல்வர் குழாத்தின் வல்லாண்மை ஊழி முடிவடைந்து விட்டது.

நல்லூழ் காரணமாக இன்று முன் எப்போதுமிருந்ததைவிட அதிக அளவில் மக்கள் அரசியல் இயக்கத்தில் பங்கேற்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

எமக்குள்ளே சிலரை அகற்றுவதும் வேறுபடுத்துவதுமன்று எமது இன்றைய தேவை. எமது அணிக்குள் பிளவும் ஒற்றுமையின்மையுமல்ல நமக்கு இன்று தேவைப்படுவன. புதிய குழுக்க

Scanned with CamScanner

ளும் புதிய கட்சிகளுமல்ல இன்றைய தேவை. அனைவரும் 'ஒன்று கவும் ஒற்றுமையாகவும்' நிற்பதே இன்று எமக்குத் தேவைப்படு கிறது. தமிழன் உறுதியாகவும் தீர்மானமாகவும் நின்ற அந்தப் புகழ் பூத்த காலத்துக்கு நாம் மீண்டும் செல்வதே இன்றைய தலையாய காலகட்டத்தின் தேவையாகும்.

எம்மிடம் ஒரு நிகழ்ச்சிநிரல் உண்டு. எம்மிடம் நனவாக வேண்டிய ஒரு கனவு உள்ளது. அதற்காக உழைக்கும் குழு ஒன்றும் எம்மிடம் உள்ளது.

நாம் ஒன்றாக இணைந்து போராடாவிட்டால் பிரிந்து நின்று நாம் அழிந்து விடுவோம். எமது இயக்கம் சமநிலையும், சரிக் கட்டும் இயல்பும் உள்ளவர்களை மட்டும் கொண்டதாக இருக்க முடியாது. அறிவும் அமைதியும் உள்ளவர்களை மட்டும் கொண்ட தாக இருக்க முடியாது.

மரபுவழியில் ஒத்துழைக்க மறுப்பவர்களும் (Nonconfor mists), வழமைக்கு முரணாகத் திடீரெனச் சிந்தித்துச் செயற்படு வோரும், மற்றவர்களால் நினைக்க முடியாதவற்றை நினைத்துச் செயற்படுவோரும் தமிழர் விடுதலை இயக்கத்துக்கு இன்று தேவை.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரேயன்றி மக்கள் அனைவரும் இயக் கத்தில் இணைந்து செயற்பட வழிவகுக்க வேண்டும். இயக்கம் அடிமட்டம்வரை பரந்து வேர்விட்டு உறுதிப்படவேண்டும். இயக் கம் மக்கள் இயக்கமாக மலர வேண்டும். இயக்கம் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

எமது விடுதலைப் பணிக்கு முதலில் தேவைப்படுவது தன் னம்பிக்கையேயாகும். பிறரில் சார்ந்திருக்கும் கொள்கை எமது விடுதலை நாட்டத்தைக் கொன்று விடும்.

புரட்சி என்பது மகிழ்ச்சிகரமான இரவுவிருந்தென்று சிலர் கருதுகிறார்கள். அஃது அப்படிப்பட்டதன்று;போராட்டத்தின் மூலமே அதிகாரம் பிறக்கிறது என்பது சீனப் புரட்சியின் கோட்பாடு.

நாம் இன்று திருப்புமுனையில் நிற்கிறோம். நாம் மரபு வழி யாகப் பின்பற்றி வந்த பாராளுமன்ற முறைப் போராட்டங்கள் அனைத்தையும் கைவிட்டு விட்டுப் பாராளுமன்றம் சாராத போராட்ட நெறிமுறைகளை உருவாக்கி மேற்கொள்ளவேண்டும்.

அடையக்கூடிய அனைத்தையும் அடைய நாம் கடின—அரிதான வழிகளில் முயல வேண்டும். (கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது—திருக்குறள்) 'நாம்' எமது தொழிற்பாடுகளில் கவனமாக...விழிப்பாக இருக்க வேண்டும். அரசியலில் காய்களை நகர்த்தும் போது முழுமையான திட்டமும்

உறுதியான நிலைப்பாடும் எமக்கு இன்றியமையாதவை. நாம் கிள்ளுக் கீரைகளாக நடத்தப்பட்டுள்ளோம். சிங்கள அரசு திட்டமிட்டு, எம்மை ஏமாற்றிவிட்டது.

மாவட்ட வளர்ச்சிக் கழகம் ஒரு மாயமான் (Trojan Horse). சிங்களவர்கள் (Beware of Greeks) உங்களுக்குப் பரிசுகளைத் தரலாம். இது காலத்தைக் கடத்த அவர்கள் கையாளும் தந்திரம். ஒவ்வொரு முறையும் அவர்கள் காலத்தைக் கடத்துகின்றபோது நாம் நிலையான தோல்வியை நோக்கிச் செல்கிறோம்.

அடிப்படைத் தன்னுரிமைகளை விற்றுச் சிறு சலுகைகளை-பாதுகாப்பைத்-தேடுபவர்கள் விடுதலைக்கோ பாதுகாப்புக்கோ தகுதி அற்றவர்கள். (கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கை கொட்டிச் சிரியாரோ — பாரதியார்.)

போராட்டத்தின் பெறுபேறாகவே வீரம் பிறக்கிறது. சிங்களவர் எம்மைக்கோழைகள் — வலுவற்றகள் என்கிறார்கள் அதற்கொப்ப, நம்மவர்களும் கடினமான எதிரியை எங்களால் சமாளிக்க முடியாது என்று கூறுகிறார்கள்.

நான் அவர்களிடம் ஒன்று கேட்பேன். நாம் எப்போது வல்லவர்கள் ஆவோம்? அடுத்தகிழமையா? அடுத்தமாதமா? அடுத்த ஆண்டா? எப்போது நாம் வல்லவர்கள் ஆவோம்?

நாம் இன்றே எமது வலிமையைக் காட்டத் தொடங்குவோம். நாம் முழுமையாக வலுவற்று, உரிமையற்று, சிங்களவர்கள் எம்மை முற்றாக அடிமைப்படுத்தியபின் நாம் எவ்வாறு எமது வீரத்தைச் செயலிற்காட்ட முடியும்?

செயலின்றியும், விடுதலை வேண்டும் என்ற உறுதியின்றியும் இருப்பதால் நாம் வலுப்பெற்று விடமுடியுமா?

'என்றோ ஒருநாள் விடியும்; விடுதலை வரும்' என்று நாம் சோம்பியிருக்கும் போது, எதிரி எம் கைகளையும் கால்களையும் உறுதியாகக் கட்டிப் போட்டபின் எமக்கு வீரம் வருமா?

நாம் துப்புக்கெட்டவர் அல்லர். இதனை நம்புங்கள். நாம் வல்லமையுடையவர்கள். களத்தில் நிற்கும் எல்லா ஆற்றல்களையும் ஒன்று திரட்டி, ஓரணியில் போராடத் தொடங்கும்போது நாம் வலிமையுடையவர்களாகி விடுவோம்.

இறைவன் — படைத்தவன்; நாம்-போராடும்போது எமது போராட்டத்தில் மாபெரும் வெற்றிகளை ஈட்ட நண்பர்களைப் படைத்துத் தருவான்; படியளப்பான். நாம் களத்தில் குதித்து விட்டோம். போராட்டத்திலிருந்து பின்வாங்கி ஓடிவிட முடியாது. (பாரதப்

போரில் பார்த்தன் ஓடமுயன்றது போல நாமும் பின்வாங்கி ஓடக் கூடாது).

பலர் உடன்பாடு அமைதி என்று கூக்குரலிடலாம். ஆனல் இன்று உடன்பாடு நிலவவில்லை-போர் அறிவிப்புச் செய்யப்பட்டு விட்டது. படை மறவர்கள் பயன்படுத்தும் பொருளிலன்று-எதிரிகள் அறிவிப்புச் செய்துவிட்டபோது நாம் சோம்பிக்கிடக்கலாமா? அவர்கள் எம்மை என்ன செய்யும்படி கேட்கிறார்கள்?

உயிர் வெல்லமா? அமைதி அத்துணை இனியதா? அடிமைத் தனத்தை ஏற்று நாம் அதனைப் பெறவேண்டுமா? பணிந்து ஊமை யாகி அமைதியைப் பெறத்தான் வேண்டுமா?

இறைவா, நாம் களத்தில் நிற்கிறோம். என்ன நிகழும் என்பது எமக்குத் தெரியாது. ஆனால் வல்லானே, எமக்கு விடுதலையைத் தா! அல்லது வீர மரணத்தைக் கொடு!

தமிழராகிய நாம் போராடுவோம். விடுதலையை நாடுவோம்; கண்டடைவோம்; ஆனால் அடிபணிய மாட்டோம்!

தமிழீழம் நீடு வாழ்க!

ஆசிரியர் குறிப்பு : இச் சொற்பொழிவு அண்மையில் அமெரிக்காவில், நியுயார்க்கில் நடைபெற்ற **உலகத் தமிழீழ விடுதலை மாநாட்டில்,** அமைப்பாளர்கள் ஐவரில் ஒருவரான திரு **எட்வர்டு பெனடிக்டு** அவர்களின் இரண்டாம் நாள் தலைமையுரையாகும். மிகவும் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் கருத்துச் செறிவோடும், அதே பொழுது பண்பு கடவாமலும் இச் சொற்பொழிவை யாற்றிய திரு. **பெனடிக்டு** அவர்களை மனமாரப் பாராட்டுகிறோம்.

தமிழ் நாளிகை

(தமிழ் நாள்காட்டி)

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு!

அழகிய எண்களுடன் தமிழ் மாதப் பக்கல்களும், தமிழ் நடைமுறை எண்களுடன் ஆங்கில மாதப் பக்கல்களும், ஒவ்வொரு மாதத் தாளிலும் தமிழ், தமிழின, தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்குரிய கொள்கை மொழிகளும் குறிக்கப் பெற்று, வரும் திசம்பர் முதற்கிழமையிலேயே விற்பனைக்குக் கிடைக்கும்படி அழகிய படத்துடன் கூடிய இருவண்ண நாளிகை வெளிவருகிறது.

விலை விளக்கம் பின்னர்,

தேவையானவர்கள் முன்கூட்டியே எழுதுக!
விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு கொடுக்கப் பெறுக.
தென்மொழி, சென்னை-5.

Scanned with CamScanner

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

(தலைமையகம்)

பொறுப்பு அமர்த்த அறிக்கை-4

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர்களாகக் கீழ்க்காணும் அன்பர்கள் கொடுக்கப்பெற்றுள்ள பதவிப் பொறுப்புகளில் 1-9-82 முதல், கழகச் சட்ட நெறிமுறைகட்குட்படும் பதவியாண்டுக் காலத்திற்குப் பதவிப் பொறுப்புகளில் அமர்த்தப் பெற்றுள்ளனர்.

தலைமையகம், சென்னை-5
1-9-82

பெருஞ்சித்திரனார்,
கழக முதல்வர்.

க தலைமையகம் தலைமைக் கழகச் செயலாளர்கள்:

5. கலைத்துறைச் செயலர்: **க. சேயோன்,** (குழந்தைவேலன்.) க.மு., கல், தொல். மு. பட்., சென்னை-96.

உ பெரியார் மாவட்டம்

1. காங்கயம் வட்டம்

தலைவர் : வே. அரங்கசாமி, பொறி.இ., காங்கயம்.
செயலர் : மு. அமைவாண்டார் (மௌனகுருசாமி) காங்கயம்.
பொருளர் : இரா. நெஞ்சிற்கினியன் (மனோகரன்) காங்கயம்.

ந வடஆர்க்காடு மாவட்டம்—வடக்கு (வேலூர்)

1. வாணியம்பாடி வட்டம்

பொருளர் : சீ. இளங்கோவன், வாணியம்பாடி
(தலைவர், செயலர் முன்னமே அமர்த்தப்பெற்றுள்ளனர்)

2. திருப்பத்தூர் வட்டம்

பொருளர் : வா. இரா. அறுமுகனார் (சண்முகம்) திருப்பத்தூர்.
(தலைவர், செயலர் முன்னமே அமர்த்தப் பெற்றுள்ளனர்)

ச தென்னார்க்காடு மாவட்டம்—தெற்கு (கல்லக் குறிச்சி)

1. திட்டக்குடி வட்டம்

செயலர் : புலவர். வே. சன்முகம், இல.இ.,கல்.இ.,திட்டக்குடி
பொருளர் : புலவர். மா. முத்தழகன், பெண்ணாகடம்
(தலைவர் முன்னமே அமர்த்தப் பெற்றுள்ளார்)

Scanned with CamScanner

2. திருமுதுகுன்றம்—வட்டம்
தலைவர் : அர. சிவத்திருவுருவன் (சிவசங்கரலிங்கம்)காவனூர்
(செயலர், பொருளர் ஆய்வில்)

ரு தென்னார்க்காடு மாவட்டம்—வடக்கு (விழுப்புரம்)

1. வளவனூர் நகரம்
தலைவர் : மா. சீ. ஆற்றலரசு(நடராசன்)க இ.,ச.இ., வளவனூர்
செயலர் : அ. நெடுமாறன் (இராதாகிருட்டினன்) வளவனூர்
பொருளர் : சீ. மணவழகன் (கலியாணசுந்தரம்.) வளவனூர்

2. விழுப்புரம் வட்டம்
பொருளர் : அர. அரசழகன், (இராசாராமன்) வளவனூர்
(தலைவர், செயலர் முன்னமே அமர்த்தப்பெற்றுள்ளனர்.)

3. திருக்கோவிலூர் வட்டம்
தலைவர் : சின்ன. ஆ. பாலன், திருக்கோவிலூர்.
(செயலர், பொருளர் முன்னமே அமர்த்தப் பெற்றுள்ளனர்.)

சு திருச்சி மாவட்டம்

1. கரூர் வட்டம்
செயலர் : கடவூர். ப. மணிமாறன் க மு;கீ க.இ; இல.இ; கல்.இ
கிருட்டிணராயபுர
(தலைவர் முன்னமே அமர்த்தப்பெற்றுள்ளார்; பொருளர் ஆய்வில்)

எ தகடூர் மாவட்டம்

1. பெண்ணாகரம் வட்டம்
தலைவர் : கா. சேயுருவோன், (சென்னமூர்த்தி) பாலக்கோ
செயலர் : புலவர். இரா. வேட்டரையன்
(இரா. வேட்ராயன்)க.மு., பாலக்கோ
(பொருளர் ஆய்வில்)

2. அரூர் வட்டம்
தலைவர் : இரா. கண்ணிமை, மூக்கனூர்பட்டி.
(செயலர், பொருளர் முன்னமே அமர்த்தப்பெற்றுள்ளனர்.)

3. தேனகனிக் கோட்டை வட்டம்
செயலர் : பாவலர். அன்பு தீபன், கொமங்களம்
(தலைவர் முன்னமே அமர்த்தப்பெற்றுள்ளார், பொருளர் ஆய்வி

அ முகவை மாவட்டம்—கிழக்கு (இராமநாதபுரம்)
மாவட்ட அமைப்பாளர்: பறம்பை அறிவன், பரமக்குடி,
,, செயலர்: தி.க. மும்முடி முகிலன், கீழைக்கரை.
,, பொருளர்: புலவர். இரா. சிவ அறுமுகம்
(சிவசண்முகம்) வண்ணாங்குண்

1. முகவை வட்டம்

தலைவர் : மெய். அருண்மொழியன் கலையனூர்.
செயலர் : கா. நிலவழகன், (சோமசுந்தரம்.) முகவை.
பொருளர் : ஈ. அருள்நேயன், மும்முடிசாத்தான்.

2. முகவை நகரம்

செயலர் : முகவை மகிழ்நன் (அசோகன்), முகவை.
(தலைவர், பொருளர் ஆய்வில்)

3. கீழைக்கரை நகர்—வட்டம்

தலைவர் : க. கருப்பையா இல.இ., கீழைக்கரை.
செயலர் : மறைமணாளன், கீழைக்கரை.
பொருளர் : புலவர். செங்கதிர்ச்செல்வன் க.மு., கீழைக்கரை.

4. பரமக்குடி வட்டம்

தலைவர் : சி. ச. கருப்பையா இல. இ.; பரமை.
(செயலர், பொருளர் ஆய்வில்)

5. சிவகங்கை வட்டம்

செயலர் : புலவர். சொ. நற்றேர் (பகீரத) நாச்சியப்பன் க.இ., சிவகங்கை.
(பொருளர், தலைவர் ஆய்வில்)

கூ முகவை மாவட்டம்—மேற்கு (விருதுநகர்)

மாவட்ட அமைப்பாளர்: பேரா. க. திருமாறன், விருதுநகர்.
,, செயலர் : தெ. சாலமகன் அரசு (சாலமோன்ராசு) க.மு., விருதுநகர்.
,, பொருளர்: கா. அ. வேங்கடமுதல்வன் (வெங்கடாசலபதி) க.இ., விருதுநகர்.

1. விருதுநகர் வட்டம்

தலைவர் : புலவர். வீ. அழகிறைவன் (இராமசாமி) க.மு., கல். இ., விருதுநகர்.
செயலர் : அ. நாயகனார் (நயினார்) க.மு., கல்.இ., விருதுநகர்.
பொருளர் : சி, இளமாறன், விருதுநகர்.

2. அருப்புக்கோட்டை வட்டம்

பொருளர் : புலவர். நா. பொதிகையரசு (போத்திராசு). அருப்புக் கோட்டை.
(தலைவர், செயலர் ஆய்வில்)

ய மதுரை மாவட்டம்—தெற்கு (மதுரை)

மாவட்ட அமைப்பாளர்: புலவர். ஆ. பூ. பொன்னரசனார். க. மு. (சொக்கலிங்கனார்) தா. வாடிப்பட்டி
(மாவட்டச் செயலர், பொருளர் ஆய்வில்)

1. மதுரை நகரம்—வடக்கு
தலைவர் : இரா. ப. தமிழ்நாடன் (சுப்பையா) மதுரை.
செயலர் : மரு. தமிழ்நம்பி, (விவேகானந்தன்) புதுத்தாமரைப்பட்டி.
பொருளர் : மரு. அருளரசன் (கருணமூர்த்தி) புதுத்தாமரைப்பட்டி.

2. மதுரை நகரம்—தெற்கு
தலைவர் : சி. சு. எழிற்கண்ணன் க மு., மதுரை.
செயலர் : பி. தமிழரவம், மதுரை.
பொருளர் : தி. குமரப்பன் க.இ., மதுரை.

கக மதுரை மாவட்டம்—வடக்கு (திண்டுக்கல்)
மாவட்ட அமைப்பாளர்: மருத்துவர் பா. விர. கண்ணன் மரு.இ.,அ.இ., திண்டுக்கல்.
,, செயலர்: சோ. மணிமுத்து, க.இ. பழனி.
,, பொருளர்: கயிலை வீ. அரசெழில் க.மு., திண்டுக்கல்.
மாவட்ட மகளிரணி அமைப்பாளர்:
திருவாட்டி. இளவேனில் கழராம்பன், அறி.இ.,ஆ.ப. நடு
,, மகளிரணிச் செயலர்:
திருவாட்டி நீ. மூத்துச்செல்வி, அறி,இ., கல். இ.,அகரம்

1. நிலக்கோட்டை வட்டம்
செயலர் : த. வையைநம்பி, கரியாம்பட்டி
(தலைவர், பொருளர் ஆய்வில்)

2. பெரிய குளம் வட்டம்
தலைவர் : பெ. பெருஞ்சித்திரன், கல்லுப்பட்டி
செயலர் : புலவர். ச. திருமலைவேலவன், வத்தலக்குண்டு.
பொருளர் : சா. அறவரசன் (தருமராசு) வடகரை.

3. பழனி வட்டம்
தலைவர் : பாலு. தென்னவன், அமரர்பூண்டி.
செயலர் : அரசு. மணியன், அனுப்பபட்டி.
பொருளர் : புதுமை விரும்பி (ப.அ.பு. மகுடேசுவரன்) பழனி.

4. திண்டுக்கல் வட்டம்
தலைவர் : ஆ. செல்லப்பாண்டியன், திண்டுக்கல்.
செயலர் : இரா. கழராம்பன், திண்டுக்கல்.
(பொருளர் ஆய்வில்)

5. வேடசந்தூர் வட்டம்
தலைவர் : கல்லை. அருட்செல்வன், முருநெல்லிக்கோட்டை.

செயலர் : நல். இளஞ்செழியன், ஒட்டநாகம் பட்டி.
(பொருளர் ஆய்வில்)

௧உ **திருநெல்வேலி மாவட்டம்—தெற்கு** (திருநெல்வேலி)

மாவட்ட அமைப்பாளர் : புலவர். ச. சிவசங்கு, ஏரல்.
,, செயலர் : ச. தென்னவன்கோ, க.மு., பாளையங்கோட்டை.
,, பொருளர்: த. அன்பழகன், தூத்துக்குடி.

1. நெல்லை வட்டம்

செயலர் : புலவர். சு. தென்மாறன் (கிருட்டிணன்) கீழைத்தென்குளம்.
பொருளர் : செ. நெல்லையப்பன், நெல்லை
(தலைவர் ஆய்வில்)

2. நெல்லை நகரம்

தலைவர் : தென். சு. இளங்கோ, (கணபதி) தென்குலம்.
செயலர் : ந. பொருணையன் (முத்துக்கிருட்டிணன்.) சிந்துபூந்துறை.
(பொருளர் ஆய்வில்)

3. தூத்துக்குடி வட்டம்

செயலர் : வே. இளவரசன், (பால்ராசு) தூத்துக்குடி.
(தலைவர், பொருளர் ஆய்வில்)

4. நாங்குனேரி வட்டம்

செயலர் : சங்க.தமிழ்ச்செல்வன், திருக்குறுங்குடி.
(தலைவர், பொருளர் ஆய்வில்)

5. பாளையங்கோட்டை வட்டம்

செயலர் : சிவந்தி ப. பொற்செழியன், பாளையங்கோட்டை.
(தலைவர், பொருளர் ஆய்வில்)

6. இராதாபுரம் வட்டம்

செயலர் : க. இளந்திரையன், க.இ.,கல்.இ., வள்ளியூர்.
(தலைவர், பொருளர் ஆய்வில்)

௧௩ **திருநெல்வேலி மாவட்டம்—வடக்கு** (தென்காசி)

மாவட்ட அமைப்பாளர் : த. கரிகாலன், (கங்காதரன்,)க.மு. கடையநல்லூர்.
,, செயலர் : அ. தமிழன்பன் (முகைதீன் பிச்சை) கடையநல்லூர்.
,, பொருளர் : இரா. பாண்டியன் (சொக்கலிங்கம்) கடையநல்லூர்.

மாவட்ட மகளிரணி அமைப்பாளர் :
திருவாட்டி. எழில்தேவி கரிகாலன், கடையநல்லூர்.

Scanned with CamScanner

1. தென்காசி வட்டம்
தலைவர் : இ. தூய அன்பறிவன் (மரியஅல்போன்சு இரசிசு) கடையநல்லூர்.
செயலர் : செ. இப்பாரரசு (இப்பாக்கிரட்டிசு). கடையநல்லூர்
(பொருளர் ஆய்வில்)

கச **கன்னியாகுமரி மாவட்டம்**
மாவட்ட அமைப்பாளர் : சு. நக்கீரன், குளச்சல்.
,, செயலர் : மு. குமரிச்செல்வன் (குமரேசன்) கடுக்கரை.
,, பொருளர்: தா.மு தமிழ்ப்பித்தன், கடுக்கரை.

1. நாகர்கோயில் நகரம்
செயலர் : மா.மு. தமிழ்மணி (சுப்பிரமணி) சுசீந்திரம்.
பொருளர் : சே. திருச்செல்வன் (தாமசு அந்தோணி.) கோட்டாறு.
(தலைவர் ஆய்வில்)

2. தோவாளை வட்டம்
தலைவர் : புலவர். த. குமரநேயன் (குமரேசன்) க.இ., தாழைக்குடி,
(செயலர், பொருளர் ஆய்வில்)

3. அகத்தீசுவரம் வட்டம்
செயலர் : கு. தமிழவேள் (சுயம்புகேசவன்) வைரா குடியிருப்பு.
பொருளர் : செ. முருகன், வைராகுடியிருப்பு.
(தலைவர் ஆய்வில்)

கரு **புதுவை மாநிலம்**
1. புதுவை மாவட்டம்
மாவட்டப் பொருளர் : சொ. மணி., கதிர்காமம்.
(தலைவர், செயலர் முன்னமே அமர்த்தப் பெற்றுள்ளனர்.)
(பிற அமர்த்தங்கள் ஆய்வில்)

விற்பனைக்கு அணியம்!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் அரிய நூல்கள் மறுபதிப்பு அச்சாகி முடிந்து விற்பனைக்கு அணியமாக இருக்கின்றன. அஞ்சலில் பெற அன்பர்கள் எழுதிக் கேட்க!

1.	கொய்யாக்கனி (பாவியம்)	—	9-50
2.	தன்னுணர்வு (அரிய கட்டுரை)	—	1-50
3.	ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்.	—	2-25
4.	உலகியல் நூறு	—	6-00

பிறவெளியீடு :

இந்திச்சிக்கலும் இறுதித்தீர்வும் (மலிவுப்பதிப்பு) — 1-00
(கு. ச. ஆனந்தன்.) சிறப்புப் பதிப்பு — 1-50

பிற விளக்கங்கட்கு : அமைச்சர் — 'தென்மொழி' — சென்னை-5.

தமிழ் நாட்டின் இன்றைய நிலை!

புலவர் **நாவை—சிவம்** இல. இ, கல். இ. மணப்பாறை.

அனைவரையும் கையெடுத்துக் கும்பிடுதல் வேண்டும்!
அன்பறிவு மானமெலாம் அடகுவைத்தல் வேண்டும்!
புனைவுரைகள் மிகப்பேசி வணிகம்செயல் வேண்டும்!
புகழுமறம் உண்மையெலாம் புதைத்திடுதல் வேண்டும்!

ஆளுகின்ற கட்சியர்க்கே வால்பிடித்தல் வேண்டும்!
அடுத்தவரின் சொத்துக்கே ஆசைகொள்ளல் வேண்டும்!
நீளுயர்ந்த தமிழ்ச்சிறப்பை மறந்திடுதல் வேண்டும்!
நேர்மையின்றிப் பிறமொழியை ஆளவிடல் வேண்டும்!

பொதுத்தொண்டர் போல்நாளும் நடித்திடுதல் வேண்டும்!
பொல்லாங்கு வருமெனிலோ ஒதுங்கிடுதல் வேண்டும்!
எதுசெயினும் பணத்தினிலே தனிக்கவனம் வேண்டும்!
இயன்றமட்டும் அரசியலால் கொள்ளைகொள வேண்டும்!

உள்ளத்தில் கள்ளமுடன் உறவாடல் வேண்டும்!
ஊர்புகழ நல்லவராய் உலவிவரல் வேண்டும்!
பள்ளத்தில் கிடப்பவரைத் தாழ்த்திடுதல் வேண்டும்!
பண்பாடு, இனவுணர்வு வீழ்த்திடுதல் வேண்டும்!

கன்னியர்கள் பலபேரைக் கயமைசெயல் வேண்டும்!
கடமையினைச் செய்யாமல் உரிமைபெறல் வேண்டும்!
மின்னிவரும் பொய்ம்மையிலே மிதந்திடுதல் வேண்டும்!
மேன்மைசொலும் சான்றோரைப் பழித்துரைத்தல் வேண்டும்!

சாதிமத வேற்றுமையைத் தழைக்கவிடல் வேண்டும்!
சாய்க்கடையாம் இதழ்களினைப் பெருகவிடல் வேண்டும்!
பாதிமன வாழ்வினிலே வாழ்க்கைசெயல் வேண்டும்!
பட்டமொடு பதவிக்கே சூழ்ச்சிசெயல் வேண்டும்!

அரைகுறையாய் ஆங்கிலத்தில் உளறிடுதல் வேண்டும்!
அம்மா ஓ! அருவருப்பாய் உடையணிதல் வேண்டும்!
திரைப்படங்கள் காமவெறி தூண்டிடுதல் வேண்டும்!
சீர்கெட்ட தமிழ்நாட்டின் இன்றைநிலை காணீர்!

Scanned with CamScanner

1. நூல் : **சாதி எதிர்ப்பு மொழிகள்**

ஆசிரியர் : **பஞ்சூர் மு. திருவேங்கடம்.**
விலை : குறிப்பிடப் பெறவில்லை. பக்கங்கள் : 72.
வெளியீட்டு முகவரி : 19, சலன் அபுதுல்லா, பஞ்சூர், மூவார், சோகோர், மலேசியா.

சாதியே இந்து மதத்தைக் காத்துக் கொண்டிருக்கின்றது. இந்து மதமே தமிழினத்துள் ஒற்றுமை யேற்படாதவாறு ஒரு தொடர் நிலையை உருவாக்கி விட்டது. பார்ப்பனரும் அவரின் அடிமைகளும் சாதிப் பிரிவுகட்குத் தூண்டுகோலிட்டுக் கொண்டு வலிவூட்டிக்கொண்டு அயராது விழிப்பாகச் செயல்பட்டு வருகின்றனர். அறிவு இனமான தமிழினம் அவ்வலைக்குட்பட்டுத் திக்கு முக்காடி உழன்று, படிப்படியே அழிவுற்றுக்கொண்டு வருகின்றது. எப்படியும் தமிழினத்தைக் கடைத்தேற்றியே தீரவேண்டும் என்று துடித்த அறிஞர் பெருமக்கள் அனைவரும் வாய்ப்பு நேர்ந்தவிடமெங்கும் தவிராது சாதிக் கொடுமைகளைக் கண்டித்தும் அவற்றால் தமிழினம் அடைந்த வீழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டியும் விளக்கியும் அறிவு கொளுத்தி வந்தனர். அவற்றையெல்லாம் தெளிவாகத் தொகுத்துப் பார்த்து, அவற்றில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து தமிழினம் சீர்பெற, 'சாதி எதிர்ப்பு மொழிகள்' என்னும் தலைப்பின் கீழ் அரிய இந்தத் தொகுப்புநூலை உருவாக்கியுள்ளார் பஞ்சூர். மு. திருவேங்கடம் அவர்கள் படித்துப் பார்த்துப் பயன்பெற இதுவோர் அரிய சிறு களஞ்சியம்.

2. நூல் : **தமிழ் ஆடவர் தன்மானப் பெயர்கள்.**

ஆசிரியர் : **பஞ்சூர். மு. திருவேங்கடம்.**
விலை : குறிப்பிடப் பெறவில்லை. பக்கங்கள் : 40.
வெளியீட்டு முகவரி : 19. சலன் அபுதுல்லா, பஞ்சூர் மூவார், சோகோர், மலேசியா.

தனித்தமிழ், தன்மானம், பகுத்தறிவு இவையே நம் இலக்குகள். இவற்றை அடைய ஒரு வழிதான், நம் பிள்ளைகட்குப் பெயர் சூட்டும் போது அழகிய செந்தமிழில் அவற்றைச் சூட்டுவது என்கிறார் ஆசிரியர். செத்தமொழிப் பெயர்களுக்கு நேரான செழுந்தமிழ்ப் பெயர்கள் என்ற தலைப்பின் கீழ், இருபது பக்க அளவில் வடமொழிப் பெயர்கட்கேற்ற செழுந்தமிழ்ப் பெயர்களை அருமையாகக் குறிப்பிட்டுள்ளார். பிள்ளைகட்குப் பெயர்சூட்டப் பயன்பாடுடைய அரிய சிறிய நூல் இது.

Scanned with CamScanner

3. நூல் : **தமிழ்ப் பெண்டிர் நன்மானப் பெயர்கள்.**

ஆசிரியர் : **மு. திருவேங்கடம்.**
விலை : குறிப்பிடப் பெறவில்லை. பக்கங்கள் : 32.
வெளியீட்டு முகவரி : 19. சலன் அபுதுல்லா, பஞ்சூர், மூவார், சோகோர் மலேசியா.

பெண் குழந்தைகட்குச் செந்தமிழ்ப் பெயரிடப் பயன்படுகின்ற நல்ல நூல்களில் இதுவும் ஒன்றாகும். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களின் பெயர்கள் யாவும் தமிழாக ஒளிர-மிளிர வேண்டும் என்று நம்மனோர்க்கு அன்புக் கட்டளையிடுகின்றார் ஆசிரியர்.

4. நூல் : **அழைப்பிதழில் அறிக்கையில் தனித்தமிழ்**

ஆசிரியர் : **மு. திருவேங்கடம்.**
விலை : குறிப்பிடப் பெறவில்லை. பக்கங்கள் : 32.
வெளியீட்டு முகவரி : 19. சலன் அபுதுல்லா, பஞ்சூர், மூவார் சோகோர், மலேசியா.

சிதறிச்சீரழிந்துவரும் தமிழினம் தன்னைக்காத்து நிலைநிறுத்திக் கொண்டு மேம்பாடுற, தான் பெற்றுள்ள ஒரேயொரு வலிவு தமிழே. அது தூயதமிழே! தமிழ் மீண்டால் தமிழ் இனமும் நாடும் தவிராது மீட்சியடைந்தே தீரும். எங்கும் எதிலும் செந்தமிழே பயிலப்பெறுதல் வேண்டும். அழைப்பிதழிலும் அறிக்கையிலும் செப்பமாகவும் தூய்மையாகவும் மொழிநடை கடைப்பிடிக்கப் பெறவேண்டும். அந்நிலைக்கு வழிகாட்டியாக இந்நூல் முயல்கின்றது. தனித்தமிழ் என்ற தலைப்பமைந்தும், பலூன் (= பூதி), ஆப்பிள் (= அரத்தி) உபரி, (= மிகை). தரப்பு (= அணி, பக்கம்) தற்காலிகம் (= உடக்காலம்), அவசரம் (= விரைவு) போலும் அயல் மொழிச் சொற்கள் விலக்கப்பெறுமலே பயன்படுத்தப்பட்டுள்ளமை வருத்தத்திற்குரியதாகும். பின்பதிப்புகளில் திருத்தமுற வரும் என்றும் நம்புகின்றோம். ஏனெனில் அதை உருவாக்கியது ஒரு தமிழ் நன்னெஞ்சமாதலால்.

5. நூல் **பெயர்ப் பலகையில் தனித்தமிழ்.**

ஆசிரியர் : **மு.திருவேங்கடம்**
விலை : குறிப்பிடப் பெறவில்லை. பக்கங்கள் : 32.
வெளியீட்டு முகவரி : 19. சலன் அபுதுல்லா, பஞ்சூர், மூவார், சோகோர், மலேசியா.

'வணிக விளம்பரப் பலகை-அதில் வண்தமிழ் இலாவிடில் கைவை' என்றார் பாவேந்தர். வணிக விளம்பரப் பலகை, பெயர்ப்பலகை திருத்தமாக எழுதப் பெறவும், இல்லாவிடில் இயக்கங்கள் நிலையங்கள் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றுக்குப் பெயரிட்டுக் கொள்ளவும் வழிகாட்டியாக ஏற்ற தூய தமிழ்ப் பெயர்களை வகைப்படுத்தியுரைக்கும் நல்ல நூலாகும் இது. **—தமிழூர் ப. அருளி.**

'வாஞ்சிநாதன் ஒரு வர்ணாச்சிரம இந்துமத வெறியன்!

அடிப்படைச்சான்று: 'தமிழக வரலாறு' (நூல்) கூறும் உண்மை.

நூலாசிரியர் : அ. கணபதி B. Sc., M. A. Dip. Arch DHED.

முதுகலை வரலாற்றுத் துறை அரசினர் கலைக் கல்லூரி, மேலூர்-625105.

பக்கம் 172 & 173. (பார்க்க.)

செங்கோட்டையிலுள்ள ஒரு பிராமண குலத்தைச் சேர்ந்த வாஞ்சிநாதன், இளவயது முதலே வா. வே. சு. ஐயர், பாரதியார், நீல கண்ட பிரமச்சாரி ஆகியோர்கள் பால் மிக்க ஈடுபாடு கொண்டு, தேசிய இயக்கத்தில் ஒரு தீவிர வாதியாக மாறினார். இந்து மதத்தின் பழம் கோட்பாடுகளிலும், அமைப்பு முறைகளிலும் பெரும் நம்பிக்கை வைத்திருந்த வாஞ்சிநாதன, கிறித்துவ மதத்தையும், ஆங்கிலேயர் ஆட்சியையும், தீவிரமாக எதிர்த்தார். கிறித்துவ மதத்தாலும் ஆங்கிலேயர் ஆட்சியாலும், இந்து மதத்திற்குப் பேராபத்து வந்து விட்டதாக வாஞ்சிநாதன் எண்ணினார். **இவரை ஒரு தீவிர தேசிய வாதி என்று சொல்வதை விட, ஒரு தீவிர இந்து தர்மவாதி என்று கூறுவதே மிக்க பொருத்த முடையதாக இருக்கும்.**

ஆரம்பத்தில், திருவிதாங்கூர் அரசில் ஓர் வனத்துறை அலுவலராகப் பணியாற்றிய வாஞ்சிநாதன், பாண்டிச்சேரியில், வா. வே. சு. ஐயரிடம், கைத்துப்பாக்கி சுடுவதற்கு மூன்று மாதம் பயிற்சி பெற்றார். இவர் 1911-ஆம் ஆண்டு தேதி மணியாச்சி ரயில் சந்திப்பு நிலையத்தில், திருநெல்வேலி மாவட்டக் கலக்டர் ஆஸ் (Ashe) என்னும் ஆங்கிலேயரைச் சுட்டுக் கொன்று விட்டு, விரட்டி வரும் போலிசிலிருந்து தப்பி, ஓர் கழிப்பறையில் புகுந்து, கதவைத் தாளிட்டுக் கொண்டு, தற்கொலை செய்து கொண்டார. இவர் சாகும் பொழுது, தனது பையில் ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தார். அக் கடிதததில், இந்தியாவில் மீண்டும‡ **'பழைய தர்மம்'** கொண்டு வரப் படுமேயானால், இங்குள்ள ஆங்கிலேயர்கள், ஆனைவரும் கொன்று குவிக்கப்பட வேண்டும்'. எனனும் வேண்டுகோளை எழுதி வைத்திருந்தார். தென்னகத்தில், இதுவே முதல் திட்டமிட்ட அரசியல் கொலையாகக் கருதப்படுகிறது. 1908-ஆம ஆண்டு, திருநெல்வேலிக் கலவரத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டிற்கு இந்த ஆஸ் துரையே காரணம் என்பதை இங்கு நினைவில் கொள்ளவேண்டும். ஆனால் ஆஸ்துரை

---

‡பழைய தர்மம் என்பது பிறவி வேறுபாடற்ற பழந்தமிழ்க் கொள்கை. புதிய தர்மம் என்பது வர்ணாச்ரம தர்மம். வாஞ்சிநாதன் வர்ணாச்ரமதர்ம வெறியன் என்பதையே இவ்வரலாற்றுப் பகுதி சுட்டிக் காட்டுகிறது. (ஆ. ர்)

Scanned with CamScanner

சுட்டுக் கொல்லப்பட்டதில், வ. வே. சு. ஐயர், நீலகண்ட பிரமசாரி, மாடசாமி, சங்கர கிருஷ்ண ஐயர் இவர்களுக்கும் பங்கிருக்க வேண்டு மென்று நம்பப்படுகிறது.

தமிழகத்தில் திலகர் சகாப்தம் என்பது முதல் உலகப் போர் துவங்கியதோடு முடிவிற்கு வந்தது எனக் கூறலாம். ஏற்கனவே வ.உ.சி.அரசியலிலிருந்து விலகியிருந்தார்.திலகர் கோகலே போன்ற வர்களின் மறைவிற்குப் பிறகு, மகாத்மா காந்தியின் எழுச்சியும், சுப்பிரமணிய பாரதியார் போன்ற தீவிரவாதிகள், காந்தியடிகளின் பால் காட்டிய புதிய பற்றுதலும் தமிழகத்து விடுதலை இயக்கத் தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியது. தமிழகத்தில், காந்தியடி களின் சகாப்தம் உருவாகும் பொழுது பிராமணரல்லாதோர் ஏற்படுத்திய நீதிக்கட்சி, அன்னி பெசன்ட் அம்மையாரின் ஹோம்ரூல் இயக்கம் போன்ற புதிய சக்திகளும் எழுச்சி பெற்றிருந்தன. திலகரின் தீவிர வாதம் ஒரு சில உயர் குடும்பத்தினர் கைக் கொண்ட தாகவும், பொது மக்களிடம் செல்வாக்குப் பெறுததாகவும் விளங் கியது. ஒரு சில ஆங்கில அதிகாரிகளைக் கொலை செய்வதின் மூலம் விடுதலை பெற்று விட முடியாது என்பதைப் பலர் உணர்ந்திருந்தார் கள். அதே நேரத்தில் இத் தீவிர வாதிகளின் நாட்டுப்பற்று, போற்றுதற்குரியதாகவும் சந்தேகத்திற்கிடமில்லாததாகவும் இருந்து வந்தது என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

(மூலவுரை வடசொற்களுடன் அப்படியே வெளியிடப் பெறுகிறது.)

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

போற்றுதலுக்கும் உரிய தகைமையினரே! இவ் விரட்டையரால் இயக்கம் குமரி மாவட்டத்தில் நன்கு கால்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

குமரிமாவட்ட நிகழ்ச்சி முடிந்ததும், நெல்லை மாவட்ட வடக் குப் பகுதி அமைப்பு நிகழ்ச்சிக்கெனத் தென்காசி செல்லல் வேண்டும் என்னும் பரபரப்பு மிகுந்திருந்தது. ஏனெனில் தென் காசி செல்லும் வழியில் சங்க. தமிழ்ச் செல்வன் ஊராகிய திருக் குறுங்குடியில் இரவு தங்கி மறுநாள் காலையில் நேரமாகவே எழுந்து செல்லவேண்டும் என்பது ஏற்பாடு. திருக்குறுங்குடியில் சங்க. தமிழ்ச்செல்வன் அவர் வீட்டில் உணவருந்த வேண்டும் என்று, முன்பே மடல் வழியாகவும் தூத்துக்குடிக்கு நேரில் வந்தும் பாவலரேறு அவர்களை அழைத்திருந்தார். நீண்ட நெடுநேரம் எண்ணிப் பார்த்துப், பாவலரேறு அவர்கள் நெல்லை உந்துவண்டி நிலையம் வந்து இறங்கிய பின்தான் இசைவளித்தார். அந்த வகையில் அவர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டு, அவர்களை அழைத்துப் போக, நாகர் கோயிலுக்கே வந்துவிட்டார். நாகர்கோயில் நிகழ்ச்சி முடிவில் ஏற்பட்ட பரபரப்பிற்கு அவர்

உடனிருந்ததே காரணியம். ஏனெனில் அங்கிருந்து திருக்குறுங்குடிக்கு இரவு 8½ மணியளவில்தான் இறுதிப் பேருந்து. அதை விட்டுவிட்டால் திருக்குறுங்குடி போகமுடியாது.

எனவே, கன்னியாகுமரி மாவட்ட அமைப்பு நிகழ்ச்சியை 7-30 அளவில் முடித்துக் கொண்டு விரைந்து ஒரு தானியில் (Auto) உந்துவண்டி நிலையம் செல்லவேண்டி வந்தது. முதல்வர் பாவலரேறு, அமைப்புச் செயலர் ப. துரையரசன், ஆகிய இருவரையும் அழைத்துக் கொண்டு சங்க தமிழ்ச்செல்வன் உந்துவண்டி நிலையம் போனார். திரு. குமரிச் செல்வன் உட்பட ஏழெட்டு அன்பர்கள் பின்னால் வந்து கொண்டிருந்தனர். ஆனால் தானி, பேருந்து நிலையம் போவதற்கும், கடைசி வண்டி புறப்படுவதற்கும், நேரம் சரியாக இருந்தது. அந்த விரைவில் பின்னால் வர இருந்தவர்களிடம் இருந்து விடைசொல்ல முடியாமலே போய்விட்டது. இதற்காகப் பாவலரேறு மிகவும் வருந்தி, சங்க. தமிழ்ச்செல்வனிடம் கடிந்து கொள்ளவும் வேண்டியிருந்தது. அனைவரும், குமரிச் செல்வனார் நினைவாகவே, இரவு 11 மணியளவில் திருக்குறுங்குடி வந்து சேர்ந்தனர். அவரிடம் சொல்லாமல் வந்ததால் எல்லாருக்குமே மனம் வருந்திக்கொண்டே இருந்தது.

திருக்குறுங்குடி தங்கல்

திருக்குறுங்குடி, சங்க. தமிழ்ச்செல்வன் வீட்டிற்கு வந்து உணவுண்ண இசைவளித்தது பற்றிப் பாவலரேறு கீழ்வருமாறு காரணம் சொன்னார். சங்க. தமிழ்ச் செல்வன் திருமணம் பாவலரேறு தலைமையில் 1981 சனவரி 16-ஆம் பக்கல் நடப்பதாக உறுதி செய்யப் பெற்றிருந்தது. சங்க தமிழ்ச்செல்வன் நெடுநாளைய தென்மொழி யன்பர் ஆதலாலும், உறைத்த கொள்கை யுணர்வு கொண்டவராதலாலும், பாவலரேறு தலைமைக்காகவே நெடுநாள் காத்திருந்து திருமணத்தை ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், திருமணத்திற்காகச் சென்னையிலிருந்து பாவலரேறு அவர்கள் நெல்லைக்குப் புறப்பட்டு இடையில் செஞ்சி நிகழ்ச்சியில் 15-1-81 அன்று கலந்து கொள்ளும் நிலையில், பாவாணர் அவர்கள் மதுரையில் மறைந்துபோன அவலச் செய்தி கிடைத்தமையின், உடனே நெல்லைச் செலவைத் தவிர்த்துவிட்டுச் சென்னை திரும்பவேண்டியிருந்தது. சங்க. தமிழ்ச் செல்வனுக்கு இது கரணியமாக வரவியலாமை குறித்துத் தொலைவரி கொடுக்கப்பெற்றது. பாவலரேறு அவர்களின இருபத்தைந்து ஆண்டுக்காலப் பொதுவாழ்வில், இது போல் ஒப்புக் கொண்டு தவிர்ந்துபோன நிகழ்ச்சி இஃதொன்றே. அது தொடர்பாகப் பாவலரேறு அவர்கள் மிகவும் வருந்தி, என்றேனும் ஒருநாள், நெல்லைப் பகுதிக்குச் செல்ல வாய்ப்பேற்படுங்கால், திருக்குறுங்குடி சென்று, சங்க தமிழ்ச்செல்வன் இணையரை நேரிலேயே வாழ்த்திவிட எண்ணியிருந்தார். அந்த வாய்ப்பை

இப்பொழுது பயன்படுத்திக் கொள்ளும் முடிவோடுதான் திருக்குறுங்குடி செல்ல ஒப்புதல் அளிக்கப் பெற்றது.

திருக்குறுங்குடியில் சங்க தமிழ்ச்செல்வன் வீட்டில் இரவு 11 மணியளவில் அன்பர் சிலர் கூடிப் பாவலரேறு அவர்களை மாலையிட்டு வரவேற்றனர். தொடர்ந்து தென்மொழி அன்பரும், வள்ளியூர் மேனிலைப் பள்ளித் தலைமையாசிரியரும் ஆகிய திரு. க. இளந்திரையன். க.இ;கல்.இ. அவர்கள் இடையிலேயே உந்துவண்டியில் ஏறிக் கொண்டு, அவர்களுடன் வந்திருந்தார். பாவலரேறு அவர்களைச் சங்க. தமிழ்ச்செல்வனின் பெற்றோர், துணைவியார், உடன்பிறந்தவர்கள் அனைவரும் மிக்க அன்புடன் வரவேற்று விருந்து தந்தனர். நீண்ட நாட்களாக அவர்களுக்கு இருந்து வந்த குறை நீங்கியது போல் அவர்கள் அனைவரின் முகங்களிலும் நிறைவு தென்பட்டது. உணவுக்குப் பின் வந்திருந்த தென்மொழி அன்பர்கள் பாவலரேறு அவர்களிடம் பல விளக்கங்களையும் ஐயங்களையும் கேட்டுத் தெளிவு பெற்றனர். சு. சந்திரகாந்தன் என்னும் அன்பர் கடந்த பத்து ஆண்டுகளாகத் தென்மொழித் தொண்டர். அவர் திருக்குறுங்குடியில் தொழுநோய் ஆய்வாளராக இருந்து வருகிறார். அவர்தாம் அழகிய மல்லிகை மாலையைப் பாவலரேறு அவர்களுக்குச் சூட்டி அன்பைத் தெரிவித்துக் கொண்டார். எல்லாரிடமும் பேசியிருந்து விட்டு, அமைப்புச் செயலரும், முதல்வரும் இரவு 1 மணியளவில் ஓய்வு கொண்டனர். அதிகாலையில் 4 மணியளவில் எழுந்து, தென்காசி புறப்பட்டனர். சங்க தமிழ்ச்செல்வனும் தென்காசி வரை வந்து வழியனுப்பினார். அவரின் தமிழ்ப் பற்றும், பாவலரேறு அவர்கள்மேல் கொண்ட அன்பும், கொள்கையுரனும் பெரிதும் மகிழ்ந்து போற்றத் தக்கவையாகும்.

நெல்லை வடக்கு மாவட்டம், தென்காசி நிகழ்ச்சி

28-7-82 காலை 9-30 மணியளவில் பாவலரேறும் அமைப்புச் செயலாளர் தென்மொழி துரையரசன் அவர்களும் சங்க. தமிழ்ச் செல்வனும் தென்காசி உந்து வண்டி நிலையம் வந்திறங்கினர். தென்னார்க்காடு வடக்கு மாவட்டப் பொருளர் திரு. **ச. சின்னத்துரை** அவர்கள், வண்டி நிலையத்தில் மலர்ந்த முகத்துடனும் சிரித்த கண்களுடனும், வெற்றிலை போட்டுச் சிவந்த வாயுடனும் அனைவரையும் வரவேற்றார். அவரும். தலைமையக முதன்மைக்குழு உறுப்பினர் தென்மொழி **சுப. திருமாறன்** அவர்களும், உ. த மு. க. நாள்காட்டி வெளியீட்டுத் தொடர்பாகச் சிவகாசி வரும் நோக்கில் அங்கு வந்திருந்தனர். திருமாறன் அறையில் இருப்பதாகச் சின்னத்துரை கூறினார். தென்காசியில் வழிப்போக்கர் விடுதி நகருக்குத் தொலைவிலிருந்ததால், பேருந்து நிலையம் அருகிலுள்ள சீனிவாசா விடுதியில் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. ஏற்பாடு செய்தவர் கங்காதரன் என்ற **கரிகாலன்** அவர்கள். கரிகாலன் தென்காசிக்கு அருகிலுள்ள

கடைய நல்லூரில், மிகவும் பொறுப்பு வாய்ந்த உயர் பதவியிலுள்ள நெடுநாளைய தென்மொழியன்பர். மிகச் சிறந்த பண்பாளர்; அளவிறந்த அன்புடையவர்; அறிஞர்; வலிந்த தனித்தமிழ்ப் பற்றாளர்; பாவலரேறு அவர்களின் மேல் ஆரா அன்பும் ஈடுபாடும் கொண்டவர். தென்மொழியில் அண்மையிதழ்களில் ஆசிரியர் எழுதி வரும் '**என்னைப் பற்றி நானே கேள்விப்படுவது**' என்னும் பகுதியைப் படித்துவிட்டுக் கண்ணீர் விட்டு அழுததாக அவர் அன்பர்களிடம் கூறி வருந்தினர். அமைதியான இயல்பு கொண்ட அவ் வருமை நண்பர், தவிர்க்க வியலாத கடமையினால் திருமாறன், சின்னத்துரை இருவரிடமும் பாவலரேறு அவர்களை வரவேற்கச் சொல்லி விட்டுக் கடைய நல்லூர் சென்று பிற்பகல் வருவதாகக் கூறியிருந்தார். அதேபோல் வந்தார். தென்காசி நிகழ்ச்சி பிற்பகல் தொடங்கியது. நெடுந் தொலைவிலிருந்தெல்லாம் அன்பர்கள் வரவேண்டியிருந்ததால் முற்பகலில் அன்பர்கள் வரவு குறைவாகவே இருந்தது. —(தொடரும்.)

தென்மொழிக்கு நன்கொடைகள்

5-7-82 முதல் 31-8-82 வரையிலான நன்கொடை வரவுகள்

1)	19-7-82	சென்னை, க. சோலை, தாம் நெய்வேலி நிறுவனத்தினின்று ஓய்வு பெற்றதன் நினைவாக விடுத்த நன்கொடை	3-25
2)	1-8-82	உறைத்த தென்மொழியன்பர் நெய்வேலி சுப. திருமாறன் தம்பி நா. வினைதீர்குன்றன் (வேங்கடாசலம்) பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் உதவிப்பொறி முதல்வராகப் பணியேற்றதன் நினைவாக	53-70
3)	2-8-82	இரணியன், கோவை (சூலை, ஆகத்து மாத நன்கொடை)	20-00
4)	2-8-82	மதுரை, வீ. ப. கா. சுந்தரம் அவர்கள், மதுரைப் பல்கலைக் கழகத்தில் 'பண்டைத் தமிழ் இலக்கியத்தில் இசையியல்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து பண்டாரகர் பட்டம் பெற்றதன் நினைவாக	20-00
5)	19-8-82	மணப்பாறை, நாவை-சிவம், கல்வி இளவல் (B.Ed) பட்டம் பெற்றதன் நினைவாக	10-00
6)	20-8-82	அம்பல், நா. தண்டபாணி- தமிழரசி ஆகியோர்க்குப் பிறந்த பெண் குழந்தையின் நினைவாக	10-00
7)	24-8-82	க. சச்சிதானந்தம், ஏடன்	400-00

நன்கொடை நல்கிய தூயதமிழ் நெஞ்சங்கட்கு நன்றியும் வாழ்த்தும்!

Scanned with CamScanner

யதும் எங்கள் இல்லத்தாருக்கும், திருமணத்திற்கு வருகை தந்தோர்க்கும் அரும் பெரும் விருந்தாக அமைந்தது குறித்து மனமகிழ்வும் அமைதியும் அடைந்தேன். எம் நண்பர்களும் பெரியோர்களும் திருமணம் முடிந்த நாளிலிருந்து தங்களைப் பற்றிக் கேட்ட வண்ணம் இருப்பதோடு, தங்களின் அமைதியான அறிவுச்சொற்பொழிவின் ஆழத்தை எண்ணி வியந்து பலவகையாகத் தங்களைப் பாராட்டிய வண்ணமிருக்கின்றனர். இனி நடக்கவிருக்கும் திருமணங்கட்குத் தவறாது தங்களை அழைத்துத் தலைமை ஏற்க வற்புறுத்தியும் உள்ளனர். இருப்பினும் தங்களின் சொற்பொழிவை இன்னும் சில மணித்துளிகள் கேட்கவியலவில்லையே என என்னுள்ளம் இன்னும் ஏக்கத்துடன் இருக்கிறது. என் வேட்கை நிறைவெய்தும் என்னும் முடிவால் மனவமைதி கொள்கிறேன். எமதில்லத்துப் பெரியோர்கள் அனைவரும் தாங்கள் பகல் விருந்துண்ணாது சென்றது குறித்து மனம் வருந்தினர்கள். அடுத்த வருகையின்போது தவறாது விருந்துண்பார் என ஆறுதல் அளித்துள்ளேன். அடுத்தமுறை எமதூர் வரும் வாய்ப்பமையும்போது தவறாது ஒரு கலந்துரையாடல் நிகழ்விலும், ஒரு பொதுக்கூட்ட நிகழ்விலும் கலந்து கொண்டு அரிய அறிவுரை வழங்கவேண்டுமாய்த் தங்களை முன்கூட்டியே வேண்டிக் கொள்கின்றேன், நிற்க.

தென்மொழி சுவடி 18 ஓலை 11 இல் திரு. வெ. திருப்பாற்கடல், வள்ளியூர் – அவர்களின் மடல் எண் 930- ஐக் கண்ணுற்றேன். சாதி ஒழிப்பு தேவையென வலியுறுத்தும் தி.க. வினர் சாதி ஒழியும் வரை சாதிக்கு ஒரு நயன்மை கேட்பது தவறென்றும், இந்நிலை நீடிப்பின் சலுகைக்காகச் சாதியை மக்கள் ஒருபோதும் கைவிடமாட்டார்கள் என்றும் தி.க. வின் கொள்கையைக் குற்றம் சாட்டியுள்ளதோடு, மதம், இறைமறுப்புக் கொள்கையை வைத்துக் கொண்டு எல்லாப் பிரிவினர்க்கும் கோவிலில் மணியடிப்பதற்கு உரிமைவேண்டும் என்று கேட்பதும் போராடுவதும் தவறென்பதோடு, மணியடிக்கும் உரிமை கிடைத்துவிட்டால் நாட்டில் உண்மையாகவே சாதிகள் ஒழிந்துவிடுமா என்றும் கேட்டுள்ளார். ஈராயிரம் ஆண்டுகளாக இந்நிலத்தில் வேரோடிய சாதிப்பிரிவால் உயர்வு தாழ்வு, செய்யும் தொழிலின் அடிப்படையில் கற்பிக்கப்பட்டு ஒரு பிரிவினர் மட்டும் மற்ற எல்லாப்பிரிவினரையும் எல்லாத்துறையிலும் மெலிவடையச் செய்து தாங்கள் மட்டும் எல்லாத்துறையிலும் தன்னேரிலா ஆளுமையில் இருக்குங்கால், அப்பிரிவினரை வீழ்த்தவேண்டுமெனின் சாதிகளின் அடிப்படையில் சலுகைகள் கேட்பதைத் தவிர வேறொரு வழியுமில்லை என்பதை உணர்ந்த தந்தை பெரியார் அவர்கள், சாதிக்கு ஒரு நயன்மை வேண்டுமென்று போராடினர். அதன் விளைவாகத்தானே இன்று எல்லாத்துறையிலும் எல்லாப்பிரிவினரும் பணியாற்ற இயல்வதோடு, இத்தகு பணிகளை எங்களால் மட்டும்தாம் செய்யவியலும், இத்தகு கல்வியினை எங்களால்தான் பெற முடியும் என்று அறைகூவல் விடுத்தவர்களின் அகங்காரம் அழிக்கப்பட்டுள்ளது; எல்லாத் துறைகளிலும் எல்லாப் பிரிவினரும் பணியாற்றும் இன்றைய நிலையால், நான்தான் உயர்ந்தவன் என்று கூறி வந்தவர்களின் வாய்க்கொழுப்பு அடங்கியதால் அவர்களின் சாதிப் பெருமையும் இன்று அழிந்து கொண்டுவரும் நிலை அடையவில்லையா? இப்படி 'எல்லாத்துறைகளிலும் பணியாற்ற எல்லாப் பிரிவினரும் புகுந்தபின்பும் குமுகாயப் பொருளியல் அரசியலில் தலைமைத் தகைமை வாய்த்த பின்பும் சாதியைக் காப்பாற்றும் ஒரே அறை,

Scanned with CamScanner

கோயிலின் கருவறைதான் என்று கருதும் சாதியின் நச்சுப்பல் விழ வேண்டுமெனின் கோயிலில் தகுதிவாய்ந்த அனைத்துப் பிரிவினருக்கும் மணியடிக்கும் உரிமை வேண்டுமென்று கேட்பது மட்டுந்தான் சிறந்த வழியாகும். ஏனெனில் அறிவையும் திறமையையும் கருத்தில் கொள்ளாது, செய்யும் தொழிலின் அடிப்படையில் உயர்வுதாழ்வையும் சாதியையும் உருவாக்கி, ஒரு பிரிவினர் மட்டும் ஒருசில துறைகளைத் தங்களுக்கே உரித்தாக்கிக் கொண்டு தங்களுக்கு நிகர் தங்களே என்ற நிலையொழியக் கரணியமாக அமைந்தது சாதிகளின் அடிப்படையில் சலுகைகள் மற்றவர்கட்கு அளித்ததல் என்பதை மறுக்கவியலுமா ? அதுபோல் இன்னும் உயர்வுதாழ்வு கற்பிக்கக் கரணியமாய் அமையும் கருவறைநுழைவும் எல்லார்க்கும் பொதுமையாக்கப்படின் எத்தகு முறையில் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று பார்ப்பனர்கள் தங்களைச் சொல்லிக் கொள்ள இயலும் ?

இத்தகு முறைக்கு மாறாக இக் குமுகாயத்தில் ஈராயிரம் ஆண்டுகளாக வளர்ந்து தழைத்த சாதியமைப்பின் உயர்வு தாழ்வை ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் எத்தகு முறையில் ஒழிக்க இயலும் ?

—**சா. தங்கராசு**, குவாகம்.

0 : 946 : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு ... —— ... என்னை யாரென்று உங்களுக்குத் தெரியாது. ஆனால் தமிழினத்தின் விடிவெள்ளியாகத்திகழும் தங்களை மிக நன்றாகவே தெரியும். குமுகாய இயலிலும், இலக்கியத்திலும், நாகரிகத்திலும்,பொருளியலிலும் தமிழன் தாழ்த்தப்பட்டுக்கிடக்கின்றான், இந்த நிலை மாறத் தாங்கள் முயன்று கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் முயற்சி கூடிய விரைவில் நிறைவேறும் சூழல் நாட்டில் நிலவிக் கொண்டு வருகிறது. எந்தப் பிரிவினரைப் பார்த்தாலும் ஒரு வெறுப்பான மன நிலையை குடிகொண்டு வருகின்றது. ஈழத்தில் தமிழன் உயிருக்கு அஞ்சும்நிலை! ஏன் தமிழகத்திலே வீரமணி அவர்களுக்கு ஏபட்ட நிலை இவற்றை எல்லாம் எண்ணுமிடத்து மனம் துயரப்படுகிறது.

இருந்தாலும் உலகத்தில் ஒவ்வோர் இனமும் தங்களுடைய தனித்தன்மைக்காகப் போராடிக் கொண்டே வருகிறது. யூதர்களுக்கென்று 'இசுரேல்' என்னும் நாடு 1948-இல் உருவாக்கப்பட்டது. இன்று அவர்களைச் சுற்றியுள்ள முசுலீம் இனத்தவர் நாடுகளை அமெரிக்கரின் உதவிகொண்டு மிரட்டும் நிலைக்கு வளர்ந்துள்ளார்கள். முசுலீம்களுக்கு அரேபியா மற்றும் பல நாடுகள். இதனைப் போலவே உருசியாவிலும், சீனாவிலும் சில இனத்தவர்கள் தங்களைக் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஏன்? இலங்கையில் சிங்களவர்கள் ஆட்சி செய்து கொண்டு நம்மவர்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் தமிழனுக்கென்று தென்மொழியை, பண்பாட்டைக் காக்கத தனி நாடு ஏதும் இல்லை. இன்றைய தமிழ்நாடு நடுவணரசிடம் அடிமைப்படுத்தப்பட்டிருக்கின்றது. எனவே நாம் தனித்தமிழ் நாடு அடைந்தே தீரவேண்டும். அதற்காக என் உயிரையும் ஈகம் செய்ய உறுதியாய் இருக்கின்றேன் என இக் கடிதம் மூலம் ஒப்பந்தம் செய்து கொள்கிறேன்.

கு. சத்தியநாதன், திண்டுக்கல்.